15 ஆண்டுகளுக்கு முன் 1991-இல் தொடங்கிய இப்பணி சிலபல காரணங்களால் விரைவில் நடைபெறாது மெதுவாக நடைபெறுகிறது.

Koviloor Digital Library

ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழாவை ஒட்டி, திருவருட்பாப் பொறபதிப்பு திட்டத்தை ஒட்டி, இப்பெரும் பணியையும் 2006-இல் நிறைவு செய்ய விரும்புகிறோம்.

சன்மார்க்க அன்பர்கள் அனைவரும் நம்மோடு தொடர்பு கொள்ளவும் தங்கள் சங்கங்களைப் பற்றி விவரம், தங்களின் வாழ்க்கைக் குறிப்பு, பணிக்குறிப்பு, அண்மைக்கால ஒளிப்படம் (மார்பளவுள்ள போட்டோ படம்) அனுப்பி வைக்கவும், கேட்டுக் கொள்ளுகிறோம்.

வாழ்க! வாழ்க!

Koviloor Digital Library

அறிஞர்களுக்கும் பதிப்பகங்களுக்கும் பாராட்டு

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருட்செல்வர்

டாக்டர் நா. மகாலிங்கம்

சன்மார்க்க உலகில் இல்லறத்தார் வரிசையில் முதல் ஸ்தானம் (இடம்) அருட்செல்வருக்கு உரியது.

இளமையிலிருந்தே வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்திலும் காந்தியத் திலும் ஈடுபாடு கொண்டவர். கோயம்புத்தூர் மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் தலைவராக விளங்கிய அருட்செல்வர் சென்னையில் வசிக்கத் தொடங்கியபின், சென்னையில் இராமலிங்கர் பணிமன்றத்தை 1965-இல் தொடங்கினார். இராமலிங்கர் பணிமன்றம் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. எனினும் அதன் முக்கிய விழா ஆண்டுதோறும் நிகழும் வள்ளலார் காந்தி விழாதான். அக்டோர் 2 மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள். அக்டோபர் 5 வள்ளலார் அவதார நாள். இவ்விரண்டையும் சேர்த்து எட்டுநாள் விழாவாக அக்டோபர் 1-8 வள்ளலார் காந்திவிழா கொண்டாடப்பெறுகிறது. 1965-இல் பணிமன்றம் தொடங்கிய ஆண்டில் வள்ளலார் காந்திவிழா முதன்முதலாக நிகழ்ந்தது. வரும் 2005 அக்டோபர் விழா 40-ஆம் ஆண்டுவிழா.

வடலூரில் வள்ளலார் நிறுவனங்களுக்கு நாம் அறங்காவலர் குழுத் தலைவராகவும் அருட்செல்வர் திருப்பணிக்குழுத்தலைவராகவும் இருந்து சத்தியஞானசபைத் திருப்பணியைச் செய்தோம். மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருப்பணியை அருட்செல்வர் தம் உபயமாகவே செய்தார். இன்றும் மேட்டுக்குப்பத்தில் நிகழும் தைப்பூசவிழா அருட்செல்வரின் உபயமாகும்.

Koviloor Digital Library

வடலூரில் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் சுத்த சன்மார்க்க நிலையம் கல்வி அற நிறுவனங்களுக்கு, அருட்செல்வர் தலைவராக இருந்து, முன்னையினும் பன்மடங்கு அபிவிருத்தியுடன் நடத்தி வருகிறார். நாம் துணைத்தலைவராக உள்ளோம். அருட்செல்வர், ஓ.பி. ஆரின் தொண்டு வாரிசு.

அருட்செல்வர் ஆற்றிவரும் வள்ளலார் காந்தி பணிகளை விரிவாக 330 பக்க அளவில் ''வள்ளலார் காந்தி பணியில் அருட்செல்வர்'' என்று ஒரு நூலாகவே நாம் எழுதியுள்ளோம்.

1923 மார்ச் 21 பங்குனி பரணி நாளில் பிறந்த அருட்செல்வர் அவர்களுக்கு இப்போது அகவை 82 நிறைவுற்று 83 நிகழ்கிறது. 100 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

எமது ஆராய்ச்சிப் பணிகளுக்கு 50 ஆண்டுகள் நிறைந்து பொன்விழாக் காணும் இந்நன்னாளில் எமது பணிகள் அனைத்திற்கும் அவ்வப்போது உதவிவரும் நண்பர் அருட்செல்வர் அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அருட்செல்வர் வாழ்க!

குடும்பம் தொழில்கள் தொண்டுகள்
ஆகிய முத்திறத்தும் மேலும்மேலும்
நலன்கள் பெருகுக!



Koviloor Digital Library



பத்மஸ்ரீ

டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

தமிழ்நாட்டு முன்னணித் தொழிலதிபர்களில் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களும் ஒருவர். 1940 நவம்பர் 9-ஆம் நாளில் பிறந்த இவருக்கு இப்போது அகவை 65 நிகழ்கிறது. ஜவுளித் தொழிலில் துணி வணிகத்தில் பட்டு உற்பத்தி வணிகத்தில் முன்னணியில் விளங்குகிறார். இவரது உள்ளமும், ஜவுளிக்கடையும் பனகல்பூங்கா போன்று அழகியவை, பரந்து விரிந்தவை, பசுமையானவை.

தொழிலதிபர்கள் எல்லாருமே அறிஞர்களாக இருப்பதில்லை. அறிஞர்கள் தொழிலதிபர்களாக இருப்பதில்லை. அருட்செல்வர் மகாலிங்கம், நல்லி குப்புசாமி செட்டியார் போன்ற சிலரே தொழிலதிபர்களாகவும் அறிஞர் களாகவும் விளங்குகின்றனர்.

நல்ல நூல்கள் சிலவற்றை நல்லியார் தாமே எழுதியுள்ளார். சிறந்த நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். ''நிர்வாகச் சிந்தனைகள்'' என்ற அவரது தொகுப்பு நூலையும், ''நீதி நூல்களில் நிர்வாகம்'', ''வள்ளுவர் வகுத்த வாணிபம்'' என்று அவரே எழுதிய நூல்களையும் நாம் படித்து மகிழ்ந்திருக்கிறோம்.

சங்க காலத்தில் விளங்கிய மருத்துவன் தாமோதரனார், அறுவை வாணிகன் இளவேட்டனார் முதலிய புலவர்களின் பெயர்களைக் கேட்கும்போதே இனிமையாகவும் வியப்பாகவும் இருக்கிறது. தாமோதரனார் மருத்துவராகவும் புலவராகவும் விளங்கியிருக்கிறார். இந்நாளில் எத்தனை மருத்துவர்கள் தமிழ்ப் புலமையோடு உள்ளனர் என்பது வினாக்குறி? ஒருவர் இருவர் மிகச் சிலர் இருக்கலாம்! அறுவை

Koviloor Digital Library

வாணிகன் என்றால் துணிவணிகன். அறுவை - துணி. இன்று எத்தனை ஜவுளிக்கடைக்காரர்களுக்குத் தமிழில் நல்ல புலமை, அறிவு, உள்ளது?

நம்முடைய நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் இக்கால அறுவை வாணிகன் இளவேட்டனாராக நமக்குத் தோன்றுகிறார். நல்ல தமிழறிவோடு, இசைக்கலை முதலியவற்றில் ஆர்வமும் அறிவும் உள்ளவராக விளங்குகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைமாமணி விருதை முன்பே அவருக்கு நல்கியிருந்தது. டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார். இப்போது இந்திய அரசு பத்மஸ்ரீ விருதையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. பத்மஸ்ரீ விருதுக்கு முற்றிலும் பொருத்தமானவர் நல்லியார்.

பணம் இருக்கும் இடத்தில் குணம் இருப்பதில்லை. குணம் இருக்கும் இடத்தில் பணம் இருப்பதில்லை. இரண்டும் இருந்தால் அறிவாற்றல் இருப்பதில்லை. பணம், குணம், அறிவாற்றல், புலமை, புரவன்மை ஆகிய அத்தனையும் ஒருசேரப் பெற்றவர் நம் நல்லியார்.

பத்மஸ்ரீ ஒரு தொடக்கந்தான். பத்மபூஷண், பத்மவிபூஷண் வரை செல்லும் தகுதி நல்லியாருக்கு உண்டு. "பாரத ரத்னா" வரை வளர வாழ்த்துகள்.

நூறாண்டுகள் நிறைவாழ்வு வாழவும், குடும்பம், தொழில்கள், தொண்டுகள் ஆகிய முத்திறத்தும் மேலும் மேலும் நலன்கள் பெருகவும், செல்வவளம் கொடைவளம் பெருகவும் வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



தினமலர் ஆசிரியர்

டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி

வள்ளலார் தமிழ்நாட்டின் முதல் கல்வெட்டாராய்ச்சியாளர். தொண்டமண்டல சகத்தின் நூற்பெயர் இலக்கணத்தை எழுதும்போது வள்ளலார் திருமுல்லைவாயில் திருவலிதாயம் கல்வெட்டுகளைச் சான்று காட்டுகிறார். இதனை எடுத்துக்காட்டி எமது வள்ளலார் வரலாற்று நூலில், வள்ளலார் தமிழ்நாட்டின் முதல் கல்வெட்டாராய்ச்சியாளர் என்று நாம் எழுதியுள்ளோம்.

கல்வெட்டு தொல்லியல் நாணயஇயல் என்பன அருங்கலைகள். தொல்பொருளாய்விற்கும் கல்வெட்டாராய்ச்சிக்கும் அறிஞர் பலர் உள்ளனர். நாணயஇயல் ஆய்வுத்துறையில் மிகச் சிலரே உள்ளனர். அவர்களுள் தலையாயவர் தினமலர் ஆசிரியர் டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

புகழ்பெற்ற தமிழ் நாளிதழ் தினமலரின் புகழ்பூத்த ஆசிரியராக இருப்பதோடு, கல்வெட்டு நூல்கள் பலவற்றையும் நாணயவியல் நூல்கள் பலவற்றையும் ஆக்கியளித்திருக்கிறார்.

தமிழ் வட்டெழுத்து *1980*

சேரநாட்டில் தமிழ் வட்டெழுத்து *1982*

பிற்காலத் தமிழ் வட்டெழுத்து *1985*

சங்ககாலச் சோழர் நாணயங்கள் *1986*

பாண்டியர் பெருவழுதி நாணயங்கள் *1987*

சங்ககால மலையமான் நாணயங்கள் *1990*

Koviloor Digital Library

Late Romon Copper Coins from South India Karur and Madurai 1994

Sangam age Tamil Coins 1997

Non Roman Ancient Foreign Coins from Karur in India 2000

The Pallava Coins 2004

என்பன இவரது சிறந்த நூலாக்கங்களாம்.

லண்டனில் உள்ள ராயல் நாணயவியல் சங்கம் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தங்கள் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்து மிகப்பெரிய கௌரவத்தை வழங்கியுள்ளது. உலகளாவிய நிலையில் இது மிகப்பெரிய கௌரவமாகும்.

தமிழ்நாடு நாணயவியல் சங்கத்திற்கு அதன் தொடக்ககாலம் முதலே தலைவராக உள்ளார். தென்னிந்திய நாணயவியல் சங்கத்திற்கு பொதுச் செயலாளர், துணைத்தலைவர் என்று படிப்படியாக உயர்ந்து இப்போது தலைவராக உள்ளார். இந்திய நாணயவியல் சங்கத்தின் துணைத் தலைவராக உள்ளார்.

தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு இவரது ஆய்வு நூல்கள் பெரிதும் அரண் செய்பவை. இதுவரை வேறு யாரும் செய்யாத அரிய ஆய்வுப் பணிகளைச் செய்து அறிஞர் பலராலும் பல்கலைக் கழகங் களாலும் போற்றிப் புகழப்பெறுகிறார்.

திறமான புலமை எனின் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று பாரதியார் பாடியது இவர் விடயத்தில் உண்மை. இவரது ஆய்வுகளை லண்டன் ராயல் நியூமெஸ்மேடிக் சொசைட்டி போற்றிப் புகழ்ந்து இவரை உறுப்பினராக்கிக் கொண்டுள்ளது.

கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பணிகள் எமக்கு மிகவும் பிடித்தமானவை. தினமலர் எமக்குப் பிடித்தமான இதழ். நாம் நாற்பதாண்டுகால தினமலர் வாசகர்.

தினமலரையும், அதன் ஆசிரியர் புகழ்பூத்த நாணயவியல் நிபுணர் டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் பாராட்டி மகிழ்கிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

ஆய்வறிஞர் முன்னாள் துணைவேந்தர்

முனைவர் க.ப. அறவாணன்

பொதுவாகத் தமிழறிஞருலகில் பெரும்பான்மையோருக்கு மொழி யுணர்வு இலக்கிய உணர்வு உள்ள அளவுக்குச் சமுதாய சிந்தனை இருப்பதில்லை. இருந்தாலும் மிகக் குறைவு. விதிவிலக்குப்போன்று மிகச்சிலரே மொழி இலக்கிய அறிவோடு சமுதாயசிந்தனை நிறைந்தவராகவும் விளங்குகின்றனர். அவர்களில் தலையாயவர் அறவாணர்.

தமிழ் இலக்கிய வரலாறு எழுதினோர் பலர். மொழி வரலாறு எழுதியோர் சிலர். தமிழ்ச் சமுதாய வரலாறு எழுதியவர் யாமறிந்தவரை அறவாணர் ஒருவரே.

தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் என்றொரு நூலை எழுதினார். அரசியல் படையெடுப்பைவிடப் பண்பாட்டுப் படையெடுப்பு மிகவும் ஆபத்தானது. காலங்காலமாக ஏற்பட்ட பற்பல பண்பாட்டுப் படையெடுப்புகளால் தமிழர் பண்பாடு சீரழிந்தது. அவற்றையெல்லாம் அறவாணர் நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார். எம் உள்ளத்தைக் கவர்ந்த நூல்களில் இது ஒன்று.

தமிழர் தடங்கல் - தமிழரால் முடிந்தால் தமிழால் முடியும் - தமிழர்தம் மறுபக்கம் - தமிழர் வாழ்வு, வீழ்ச்சியும் எழுச்சியும், தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? - தமிழர் : சிந்தனை புதிது - தமிழர் வருந்தவும் திருந்தவும் - தமிழ்ச் சமூகம், என்ற நூல்கள் தமிழ்ச் சமூகத்தின் கண்களைத் திறக்க எழுதப்பெற்ற நூல்கள். இந்நூல்களெல்லாம் எம்மை மிகவும் கவர்ந்தன.

Koviloor Digital Library

சமுதாய சிந்தனை மிகுந்த தமிழறிஞர் என்பதால்தான் இவரை நமக்குப் பிடித்தது. இவரைப் போன்றே இவரது துணைவியாரும், டாக்டர் தாயம்மாள் அறவாணன், அறவாணருக்கு நல்ல துணை. இவ்விருவரும் நல்ல இணை. தாயம்மாள் எழுதிய நூல்கள் சிலவற்றையும் பார்த்திருக்கிறோம். அவ்வையார் அன்று முதல் இன்றுவரை ஒரு நல்ல ஆய்வு நூல்.

அறவாணர் சென்னைக்கு வந்து வசிக்கத் தொடங்கியிருப்பதில் எமக்குப் பெரிதும் மகிழ்ச்சி. அவர், ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒருமுறை துணைவேந்தராக இருந்தது போதாது. அவரை மீண்டும் துணை வேந்தராக்கிப் பயன் கொள்ளவேண்டும். இவரைத் துணைவேந்தராகப் பெற்றால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பன்மடங்கு வளர்ச்சி பெற ஏதுவாகும்.

அறவாணர் வாழ்க! குடும்பம் வாழ்க!!

பணிகள் வெல்க!!!

Koviloor Digital Library



புகழ்பூத்த ஆய்வாளர்
பெ.சு. மணி

சிறந்த ஆய்வாளராகிய ஏ.வி. சுப்பிரமணிய அய்யரை குறிப்பிடும் ஓர் இடத்தில் ''புகழ்பூத்த ஆய்வாளர்'' என்று நம் பெ.சு. மணி குறிப்பிடுகிறார். (பக்தி இயக்கங்கள் வழியே சமூக சீர்திருத்தம் - ஓர் அறிமுகம், பக். 71) புகழ்பூத்த ஆய்வாளர் என்ற தொடர் எமக்கு மிகவும் பிடித்துவிட்டது. புகழ்பூத்த ஆய்வாளர் என்று நாம் மணியையே குறிப்பிடத் தலைப்பட்டோம்.

பெ.சு. மணி (பெண்ணாத்தூர் சுந்தரேசன் மணி) திருவண்ணாமலையில் 02.11.1933-இல் பிறந்தவர். நமக்கும் அவருக்கும் ஆறே மாதங்கள் அகவை வேறுபாடு. நம்மைவிட ஆறு மாதங்கள் இளையவர். ஆய்வில் நம்மைவிட முதிர்ந்தவர். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் புலமையுள்ளவர். படித்தது எஸ்.எஸ்.எல்.சி. தான். வேலை பார்த்து ஓய்வுபெற்றது சென்னை விமான நிலைய அஞ்சல் பிரிப்பகத்தில் அஞ்சல் பகுப்பாளராக. எழுதியுள்ள ஆய்வு நூல்களோ ஐம்பத்து நான்கு. ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகளோ இருபத்தெட்டு. சென்னை, கோயம்புத்தூர் (பாரதியார்), மதுரை (காமராசர்), மதுரை (காந்திகிராமம்), கல்கத்தா, இலங்கை மட்டக் களப்பு - இப்படிப் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். கொழும்பு தமிழ்ச்சங்கம், இலங்கை அரசின் இந்து சமய கலாசாரம் மற்றும் திணைக்களம் முதலியவற்றிலும் ஆய்வுரை நிகழ்த்தியுள்ளார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். பொதுச் செயலாளராகவும் இணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவரது பட்டம் பதவிகளைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம்.

Koviloor Digital Library

முக்கியமாகக் கூறவேண்டியது இவரது ஆராய்ச்சித் திறனைப் பற்றித் தான். **17-18-19-ஆம் நூற்றாண்டுகளின் அனைத்துச் செய்திகளையும் இவர் தம் விரல் நுனியில் வைத்திருக்கிறார்.**

இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்றொரு நூல் எழுதி யுள்ளார். அற்புதமான நூல்.

இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும் - தமிழகத்தில் பிரம்ம சமாஜம் - பக்தி இலக்கியத்தின் வழியே சமூக சீர்திருத்தம். ஆகிய நூல்கள் நாம் விரும்பிப் படித்தவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தனை சமாஜம், சன்மார்க்க சங்கம், இராமகிருஷ்ண மிஷன், தியாசபிகல் சொசைட்டி முதலிய ஆன்மிக கலாசார (பண்பாட்டு) நிறுவனங்களைப் பற்றிய ஆய்வு தமிழில் முதன் முறையாகப் வெளிவந்தது இவரது நூல்களில்தான். இவ்வளவுக்கு வேறு இடங்களில் இவற்றைப் பற்றிய செய்திகள் தொகுப்பாகக் கிடைக்கவில்லை.

வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு எழுதிய ம.பொ.சி. தம் நூலின் தோற்றுவாய்ப் பகுதிக்கு இவரது ஆய்வுகளையே பயன்படுத்திக் கொண்டார்.

ஒருவரியிற் கூறவேண்டுமென்றால் அமரர் வெ. சாமிநாத சர்மாவின் இலக்கிய வாரிசு இவர். சர்மாவுக்கு வாரிசு இல்லை. இறுதிக் காலத்தில் தம் நூல்களின் பதிப்புரிமையைச் சர்மா இவருக்கே எழுதிவைத்தார். வெ. சாமிநாதசர்மா ஆய்வு மையம் என்பது இவரது நிறுவனம்.

பாரதி இயலில் நிபுணரான இவர் பாரதியாரைப் பற்றிப் பதினாறு நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள நூல்களில் ¼ பங்கு பாரதியாரைப் பற்றியவை. தமிழக அரசின் பாரதியார் விருது (2001-ஆம் ஆண்டுக்குரியது) இவருக்கு வழங்கப் பெற்றது மிகவும் பொருத்தமானது.

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் இவருக்குக் கௌவர டாக்டர் பட்டம் வழங்கவேண்டும். டாக்டர் பட்டம் இல்லாதது இவருக்குக் குறையன்று. கொடுப்பது பல்கலைக் கழகங்களுக்கு முறை. கொடுக்காதது பல்கலைக் கழகங்களின் குறை.

சீர்திருத்த அந்தணராகிய இவரையும், இவரது ஆய்வுகளும் எமக்கு மிகவும் பிடித்திருக்கிறது. புகழ்பூத்த ஆய்வாளர். திரு பெ.சு. மணி அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம். வாழ்க பெ.சு. மணி! வளர்க அவரது ஆய்வுப்பணிகள்!!

Koviloor Digital Library

ஆய்வறிஞர்

டாக்டர் எஸ். பத்மநாபன்

டாக்டர் எஸ். பத்மநாபன் 1934 மார்ச் 31-இல் நாகர்கோயிலில் பிறந்தார். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். பணியாற்றிய காலத்திலேயே வரலாற்றாய்வில் ஈடுபட்டார். பணிஓய்வுக்குப் பின் முழுமையாக ஈடுபட்டுள்ளார். கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையத்தை நிறுவி அதன் செயலாளராக உள்ளார். ஆய்வுக்களஞ்சியம் என்னும் இருமொழி, தமிழ் ஆங்கில, திங்களிதழை ஆசிரியராக இருந்து நடத்திவருகிறார். கன்னியாகுமரி மாவட்டக் கோயில்கள் பலவற்றுக்கு முதன்முதலாக வரலாறு எழுதியவர் இவரே.

தமிழக மாவட்டங்கள் பலவற்றிற்கு மாவட்ட கெசட்டீர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே வெளியிடப் பெற்றன. கன்னியாகுமரிக்கு மட்டும் வெளியிடப் பெறவில்லை. அண்மைக்காலத்தில்தான் வெளிவந்தது. அதுவும் டாக்டர் பத்மநாபன் அவர்களின் தூண்டுகோலால்தான் வெளிவந்தது. செகட்டீரின் முன்னுரையிலேயே இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா முதலிய ஆங்கில நாளிதழ்களிலும், தமிழ் இதழ்கள் பலவற்றிலும் நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார்.

உலகநாடுகள் பலவற்றில் நிகழ்ந்த பல மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் படித்தளித்துள்ளார். கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றுக்கும் ஆராய்ச்சிக்கும் இவர் ஒரு ஆதாரபுருடர் (அத்தாரட்டி).

Koviloor Digital Library

திருவள்ளுவரின் பிறப்பிடம் கன்னியாகுமரி மாவட்டமே, திருநாயனார் குறிச்சி என்ற ஊரே என்பது இவரது கொள்கை. இதனை ஆங்கிலத்திலும் தமிழிலும் நூலாக, கட்டுரைகளாக எழுதியுள்ளார். எளிதில் மறுக்க இயலாத சான்றுகள் காட்டியுள்ளார்.

இவரது ஆய்வுகளை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் அப்துல்கலாம் ஆகியோர் நன்கு அறிவர். கன்னியாகுமரியில் வானுயர் திருவள்ளுவர் சிலையை நிறுவிய சிற்பி கணபதி ஸ்தபதியாருக்கு இவர் நண்பர்.

டாக்டர் பத்மநாபன் அவர்கள் குடியரசுத் தலைவருக்குக் கொடுத்த சிறிய அளவிலான திருவள்ளுவர் சிலை குடியரசுத் தலைவரின் மேசையை அணி செய்கிறது. கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வுமையம் வழங்கிய ஒரு மீட்டர் உயரமுள்ள உலோகச் சிலை குடியரசுத் தலைவர் மாளிகையில் ஒரு தனிஅறையில் காட்சியாக நிறுவப்பெற்றுள்ளது. இச்சிலைகள் கன்னியாகுமரியில் நிறுவப் பெற்ற வானுயர் சிலையின் மாதிரியாக ஆனவை.

டாக்டர் பத்மநாதன் அவர்களின் மீது மாட்சியை தாங்கிய திருவிதாங்கூர் மகாராஜா ஸ்ரீ உத்திராடம் திருநாள் மார்த்தாண்டவர்மா அவர்கள் மிகவும் அன்பும் மதிப்பும் வைத்துள்ளார்கள். அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கும் பத்மநாபன் நண்பர். நமக்கும் நண்பர்.

நாகர்கோயிலில் நம் அன்பர் சுவாமி பத்மேந்திரா நடத்தும் வள்ளலார் விழாக்களுக்கு நாம் செல்லும்போதெல்லாம் இரண்டொரு நாள் தங்கி, கன்னியாகுமரி மாவட்டக் கோயில்களையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் காண்பது, களஆய்வு செய்வது வழக்கம். இவை டாக்டர் பத்மநாபன் அவர்களின் துணையின்றி இயலாது. அவர் உடனிருந்து உதவுவார்.

நாம் மதித்துப் போற்றும் ஆய்வாளர்கள் மிகச் சிலருள் நாகர்கோயில் பத்மநாபரும் ஒருவர்.

கன்னியாகுமரியில் ஒரு கலங்கரைவிளக்கம் உண்டு. நாகர்கோயிலுக்கு பத்மநாபன் தான் கலங்கரைவிளக்கம்.

வாழ்க டாக்டர் எஸ். பத்மநாபன்!

வெல்க அவர் பணிகள்!!

Koviloor Digital Library

அருட்பாக் கழகம்

தென்னாப்பிரிக்கா

ARUTPA KAZHAGAM OF SOUTH AFRICA

38, PELICAN DRIVE, BAYVIEW, CHATSWORTH, DURBAN, SOUTH AFRICA.

தென்னாப்பிரிக்கா அருட்பாக் கழகம் 50 ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. ஐம்பது ஆண்டுகளாக வள்ளலார் கொள்கைகளைப் பரப்பும் பணியை அருமையாகச் செய்து வருகிறது. சொந்தக்கட்டிடம் உள்ளது. பெரிய வளாகம். பிரதான கட்டிடத்திற்கு வள்ளலார் மன்றம் என்று பெயரிட்டுள்ளனர். அணையா ஜோதி வழிபாட்டில் உள்ளது. நாள்தோறும் காலை மாலை ஜோதி வழிபாடு. வாரந்தோறும் தமிழ் வகுப்புகள், இசை வகுப்புகள், தியானப் பயிற்சி முதலியவை நடைபெறுகின்றன. சன்மார்க்கத் திருமணங்கள் செய்து வைக்கப் பெறுகின்றன. ஜோதி திருமணம் *Jothi Wedding* என்று பெயர்.

1996-இல் நாம் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அருட்பாக் கழகத்தின் பணிகளைக் கண்டுகளித்தோம். 45 நாள்கள் அருட்பாக் கழகத்தின் ஆதரவில் தென்னாப்பிரிக்கா முழுவதும் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்தோம். சன்மார்க்க சங்கங்கள், சைவ சபைகள் பலவற்றில் உரையாற்றினோம்.

2003-இல் அருட்பாக்கழகம் 50 ஆண்டு நிறைவு பெற்றுப் பொன்விழாக் கண்டது. 24; 25; 26 அக்டோபர் 2003 மூன்றுநாளும் பொன்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். சிறப்பு விருந்தினராக நம்மை அழைத்திருந் தார்கள். அச்சமயம் இருதய பாதிப்பு ஏற்பட்டிருந்ததால் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று அருட்பாக்கழகத்தின் பொன்விழாவிற் கலந்துகொள்ள இயலாது போயிற்று.

அருட்பாக் கழகத்தின் தலைவர் திருமதி கா. சோதிநாதன் அவர்கள் தமிழறிந்தவர். அருட்பாக் கழகத்தை நன்கு நடத்திச் செல்கிறார். பொன்விழாக்கண்ட அருட்பாக்கழகத்தை நம் ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழாவில் பாராட்டி மகிழ்கிறோம்.

தென்னாப்பிரிக்கா அருட்பாக்கழகம் வாழ்க!

அதன் பணிகள் வெல்க!!

Koviloor Digital Library

இராமலிங்கர் பணிமன்றம்

பாரிஸ், பிரான்ஸ்.

பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் இராமலிங்கர் பணிமன்றம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 1979-இல் அன்பர். திரு இரத்தினசிவசண்முகம் அவர்களால் தொடங்கப் பெற்றது. வரும் 2005 செப்டம்பர் 17; 18 தேதிகளில் வெள்ளிவிழாவைக் கொண்டாட இருக்கிறது. வள்ளலார் சன்மார்க்கப் பன்னாட்டு மாநாடு - கருத்தரங்கம் ஆகியவற்றுடன் வெள்ளிவிழா ஏற்பாடாகி வருகிறது.

நிறுவனர் தலைவர் திரு. இரத்தினசிவசண்முகம் அவர்கள் டெல்லியில் பெரிய உத்தியோகம் பார்த்து, அதைவிட்டுவிட்டுப் பாரிசுக்குச் சென்று, அங்கும் பிரஞ்சு அரசில் பண்பாட்டுத் துறையில் துணைச்செயலாளராகப் பணியாற்றினார். பாரிசில் இராமலிங்கர் பணிமன்றத்தை நிறுவினார். 1998-இல் இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டை நடத்தினார். 1999-இல் திருமுறை, திருப்புகழ், திருஅருட்பா மாநாட்டை நடத்தினார். வள்ளலாரைப் பற்றி பிரஞ்ச் மொழியில் நூல் எழுதிவெளியிட்டுள்ளார்.

பிரான்ஸ் இராமலிங்கர் பணிமன்றத்தின் அழைப்பின் பேரில் நாம் முன்னமே ஒருமுறை பாரிஸ் சென்று வந்துள்ளோம். இப்போது செப்டம்பரில் நிகழஇருக்கும் மாநாட்டிலும் கலந்துகொள்ள விருக்கிறோம்.

வெள்ளிவிழா நிறைவுடன் தம் தலைமைப் பொறுப்பையும் சிவசண்முகனார் நிறைவு செய்து கொள்கிறார். அன்பர் திரு. செய. பாலகிருஷ்ணன் வெள்ளிவிழா நாளிலிருந்து பாரிஸ் இராமலிங்கர் பணிமன்றத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்க இருக்கிறார்.

இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி வெள்ளி விழாக் காண இருக்கும் பாரிஸ் இராமலிங்கர் பணிமன்றத்தையும் அதன் நிறுவனர் தலைவர் இரத்தின சிவசண்முகனார் அவர்களையும், புதிய தலைவராகப் பொறுப்பேற்க இருப்பவரும், இப்போது மாநாட்டுப் பணிகளைக் கவனித்துவருபவருமான திரு செய. பாலகிருஷ்ணன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

PERSATUAN ARULNERI MALAYSIA
மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம்
MALAYSIA ARULNERI THIRUKKOTTAM

Arulneri Nilayam, 17, Jalan Chekor, Off Jalan Halimahton
3rd Mile Jalan Kelang Lama, 58000 Kuala Lumpur.
Tel : 603-7982 4381

1955-இல் குன்றக்குடி அடிகளார் மலேசியா சென்றிருந்தார். அதற்கு முன்பே மலேசியாவில் சைவப் பெரியார் திரு. கா. இராமநாதன், பி.ஏ., பி.எல்., அவர்கள் இந்துமதப் பிரசார சபை என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திச் சுவாமி சத்தியானந்தா அவர்களின் துணையுடன் சமயப் பிரசாரங்களுடன் சமயக் கூட்டங்களும் நடத்தி வந்தார். இந்நிலையில் மலேசியாவுக்குச் சென்ற அடிகளார், முன்னரே அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த இந்துமதப் பிரச்சார சபையின் பணிகளை விரிவாக்கும் முறையில் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தை 23.01.1955-இல் தோற்றுவித்தார். 15.08.1956-இல் பதிவு செய்யப்பெற்றது.

சமயச் சொற்பொழிவுகள், சிறுவர்களுக்குச் சமய பாட வகுப்பு, பெரியவர்களுக்குச் சைவ சித்தாந்த வகுப்பு, சைவ சித்தாந்த மாநாடுகள், கோயில்களில் கூட்டு வழிபாடு, இல்லங்கள்தோறும் வழிபாடு, ஆத்மசாந்தி வழிபாடு, சமயகுரவர் சந்தானகுரவர் குருபூசைகள் எட்டு உட்பட 15 குருபூசைகள், கந்தர்சஷ்டி, பங்குனி உத்தரம், மகாசிவராத்திரி, விநாயகர் சதுர்த்தசி, தீபாவளி முதலிய விழாக்கள், அந்தர் யோகங்கள், தல யாத்திரைகள், மருத்துவமனையில் நோயாளிகளைக் கண்டு ஆறுதல் கூறுதல் என அருள்நெறித் திருக்கூட்டத்தின் பணிகள் பலவாக விரிந்து பரந்துள்ளன.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பெற்ற சைவ சித்தாந்த தத்துவத்துறை 1973-இல் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தின் மூன்று இலட்ச ரூபாய் நிதி வைப்பினாலேயே ஏற்படுத்தப்பெற்றது. சென்னையிலுள்ள சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூல் வெளியீட்டுப் பணிகளுக்கு ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது. சைவ சித்தாந்த மாநாடு, திருமந்திர மாநாடு முதலிய பல மாநாடுகளை நடத்தி

Koviloor Digital Library

யுள்ளது. நல்ல நூல்கள் பலவற்றையும் சிறந்த மலர்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான சில வருமாறு:

திருமுறைச் சிந்தனைகள் - டாக்டர் தேவபூபதி நடராஜா - 1991

சைவசமய சாத்திரக் கட்டுரைகள் - தொகுதி 1
- டாக்டர் கோமதி சூரியமூர்த்தி - 1991

சைவசமய சாத்திரக் கட்டுரைகள் - தொகுதி 2
- டாக்டர் கோமதி சூரியமூர்த்தி - 1996

சைவப்பெரியார் நினைவுமலர் - 1967

கட்டிடத் திறப்பு விழா, வெள்ளிவிழா மலர் - 1982

பவளவிழா மலர் - 1991

சைவபூஷணம் இ.வே. கந்தையா அவர்கள் நினைவுமலர் - 1994

சைவ சித்தாந்தக் கையேடு - டான் ஸ்ரீ மு. சோமசுந்தரம் - 2000

சைவப்பேரன்பரும் சைவப்பேரறிஞரும் சைவப்பெருந்தொண்டருமான டான்ஸ்ரீ. மு. சோமசுந்தரம் அவர்கள் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தின் தலைவராக விளங்குகிறார். அருமையாகத் தொண்டாற்றி வருகிறார். இவர் கா. இராமநாதன் செட்டியார் அவர்களின் மருமகனார் ஆவார். டான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் மலேசிய அரசின் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றியவர். "டான்ஸ்ரீ" என்பது மலேசிய மாமன்னர் வழங்கும் மதிப்பு வாய்ந்த பெரும்பட்டம். மலேசியாவில் இப்பட்டம் பெற்றோர் மிகச்சிலரே. அண்மையில் சைவசித்தாந்தக் கையேடு ஒன்றைத் தொகுத்து அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அளவால் சிறு நூல் எனினும் பொருளால் பெரிதும் பயனுள்ள நூல். கோலாலம்பூரில் ஜாலான் செக்கோர் சாலையில் சொந்தக் கட்டிடத்தில் அமைந்துள்ள மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் அருமையாகப் பணிசெய்து வருகிறது.

அதன் அற்புதப் பணிகளை நாம் நேரில் அறிவோம். 1980-இல் முதல் முறையாகவும், 2001-இல் இரண்டாம் முறையாகவும் நாம் மலேசியா சென்று வந்தோம். இரண்டு முறைகளிலும் அருள்நெறித் திருக்கூட்டத்தில் நாம் உரையாற்றியுள்ளோம். (23.04.1980; 13.07.2001).

அருள்நெறித் திருக்கூட்டத்தின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.
வாழ்க! வாழ்க! பணிகள் வளர்க! வெல்க!

Koviloor Digital Library



ஆசியவியல் நிறுவனம்

இருநூறு ஆண்டுகளுக்குமுன் கல்கத்தாவில் ஆசியாடிக் சொசைட்டி (ASIATIC SOCIETY) என்றொரு சங்கம் மாக்ஸ்முல்லர், வில்லியம் ஜோன்ஸ், கோல்புருக் முதலிய ஐரோப்பிய அறிஞர்களால் தொடங்கப்பெற்று நடந்து வந்தது. ஆசியக் கல்விச் சங்கம் என்று தமிழிற் கூறலாம். இச்சங்கத்தின் பணிகளால் சமஸ்கிருத நூல்கள் பல, உலக அரங்கில் ஏறின. சமஸ்கிருதம் செம்மொழி என்ற அந்தஸ்தைப்பெற்றது. இந்திய இயல் என்றாலே சமஸ்கிருதம் என்ற தவறான எண்ணம் உலக அறிஞர்கள் மத்தியில் ஏற்பட்டது.

தமிழுக்கு அப்படி ஒரு நிறுவனம் இல்லாத குறை பேராசிரியர் டாக்டர் ஜான் சாமுவேல் அவர்களால் தீர்ந்தது. இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் 1982–ம் ஆண்டில் பேராசிரியர் ஜான் சாமுவேல் அவர்களும் அவரது ஜப்பானிய மாணவர் முனைவர் ஷுஹிகோசகாவும் இணைந்து ஆசியவியல் நிறுவனத்தைத் தொடங்கினர்.

தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாத்தல், உலகளாவிய நிலையில் பரப்புதல், தமிழியல் பற்றிய உயர்மட்ட ஆய்வுகளைப் பிறநாட்டு அறிஞர்களோடு இணைந்து மேற்கொள்ளுதல் ஆகிய மூன்றும் முதன்மைப் பணிகள். ஆசியவியல் நிறுவனத்தின் தரம் உலகத்தரம்.

தமிழுக்கு, தமிழ்நாட்டில் இன்று மூன்று பெரும் ஆய்வு நிறுவனங்கள் உள்ளன.

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை.
3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Koviloor Digital Library

இம்மூன்றில் உலகத்தரத்தில் பெரும் பணிகளை மேற்கொண்டிருப்பதில் முதன்மையானது ஆசியவியல் நிறுவனம் என்று கூறலாம்.

அந்தக் காலத்தில் ராயல், மெஜஸ்டிக் என்று சொல்வார்கள். பிரிட்டிஷ் ஸ்டாண்டர்டு என்று சொல்வார்கள். அவற்றையெல்லாம் ஆசியவியல் நிறுவனத்திற் காணலாம். நம்முடைய பல்கலைக்கழகங்களில் செய்யப் பெறும் பணிகளைவிடப் பெரும்பணிகளை ஆசியவியல் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை எல்லாவற்றையும் மின்னலை நூல்களாகப் (Electronic Text) பதிவு செய்து உலகெங்கும் இணையத்தின் வாயிலாகப் பரப்பும் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

உலகத்தரத்தில் பற்பல பணிகள் நடைபெறுகின்றன. பன்னிரு திருமுறைகளையும் 29 தொகுதிகளாக ஆங்கிலத்திலும், 29 தொகுதிகளாக இந்தியிலும் மொழிபெயர்க்கும் பணி நடைபெறுகிறது. நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தை ஆறு தொகுதிகளில் மொழிபெயர்க்கும் பணியும் நடைபெறுகிறது.

ஜான் சாமுவேல் அவர்களது பணிகள், திட்டங்கள் மிகப்பெரியவை. பல்வேறு சிக்கல்கள் போராட்டங்களுக்கிடையே மாபெரும்பணிகளை அவர் செய்துவருகிறார். தமிழும் நானும் என்று அவர் எழுதியுள்ள மூன்று (தொகுதி) நூல்களால் அவரது பணிகளின் அருமை பெருமைகளை அறியலாம்.

உலகத்தரத்தில் பல்வேறு பெரிய பணிகளைச் செய்துவரும்
ஆசியவியல் நிறுவனத்தைப் பாராட்டி,

மேலும் மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

INTERNATIONAL INSTITUTTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உண்டாவதற்கான கரு 1968–இல் சென்னையில் நிகழ்ந்த இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டின் போது தோன்றிற்று. அன்றைய முதலமைச்சர் அறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்கள் தமிழுக்கு உயர்மைய ஆராய்ச்சி நிறுவனம் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

1970 அக்டோபர் 21–ஆம் நாள் ஒரு சங்கமாக உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் பதிவு செய்யப்பெற்றது.

தன்னாட்சிஅமைப்பு. ஆளுகைக்குழுத் தலைவர் கல்வி அமைச்சர். துணைத் தலைவர்கள், சென்னை, அண்ணாமலை, காமராசர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள். ஐ.ஏ.டி.ஆர் பிரதிநிதி டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள். தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், மைசூரில் உள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவன இயக்குனர் ஆகியோர் உறுப்பினர்கள். செயலாளர் – உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர்.

முனைவர் கா. மீனாட்சி சுந்தரம் – ச.வே. சுப்பிரமணியன் – அ.நா. பெருமாள் – க.த. திருநாவுக்கரசு – சிலம்பொலி சு. செல்லப்பன் – ச.சு. இராமர் இளங்கோ ஆகியோர் இயக்குனராக இருந்துள்ளனர். இப்போது இயக்குனர் முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி.

கருத்தரங்குகள் – முனைவர் பட்ட ஆராய்ச்சி – மொழிபெயர்ப்பியல், சுவடியியல் பட்டய வகுப்புகள் – பயிலரங்குகள் – சிறப்புச்

Koviloor Digital Library

சொற்பொழிவுகள் – பிறமொழியாளர்களுக்கும் பிறநாட்டினருக்கும் தமிழ் கற்பித்தல் ஆகிய உருப்படியான பெரும்பணிகள் நல்ல பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பல்வேறுவகை நூல்கள் ஏறத்தாழ முந்நூறுக்கு மேற்பட்டவை இதுவரை வெளியிடப்பெற்றுள்ளன. பல ஆண்டுகளுக்குமுன் ஒருமுறை நாம் இந்நிறுவனத்தை நேரிற்சென்று கண்டுகளித்தோம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள் பலவற்றை வாங்கி வைத்திருக்கிறோம். நம் பாராட்டிற்குரிய நிறுவனம். பாராட்டி மகிழ்கிறோம். வாழ்க! வளர்க!!

Koviloor Digital Library



மெய்யப்பன் தமிழாய்வகம்

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களால் கி.பி. 2000 ஏப்ரல் 13 தமிழ்ப்புத்தாண்டு அன்று தொடங்கப்பெற்றது.

சிதம்பரத்தில் வடக்கு வீதிக்கு அடுத்த புதுத்தெருவில் அவருடைய வீட்டுக்கு எதிரே, தனியாக ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தில் போதுமான அனைத்து வசதிகளோடும் அமைந்துள்ளது.

நூலகத்தில் 40,000 நூல்கள் உள்ளன. ஆய்வாளர்களுக்கு இது ஒரு சுரங்கம்.

மெய்யப்பனாரை நாம் மெய்யப்ப வள்ளல் என்று எழுதியுள்ளோம். அவருடைய குடும்பம், உத்தியோகம், தொழில், தொண்டு ஆகிய நான்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றன என்று எழுதியுள்ளோம்.

தமிழ்ப் பேராசிரியர்களில், பதிப்பாளர் உலகில் மெய்யப்பனார் தான் அறக்கட்டளை மன்னர் என்று எழுதியுள்ளோம்.

சிதம்பரத்தின் முதற்பெருமை – நடராசர் கோயில்

இரண்டாவது பெருமை – அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

Koviloor Digital Library

அண்மைக் காலத்தில் அமைந்த மூன்றாவது பெருமை – மெய்யப்பன் தமிழாய்வகம்

என்று எழுதியுள்ளோம்.

மெய்யப்பர் தமிழாசிரியராக அரும்பி (சரியை), நூலாசிரியராக, வெளியீட்டாளராக மலர்ந்து (கிரியை), தொழிலதிபராகக் காய்த்து (யோகம்) வள்ளலாகக் கனிந்திருக்கிறார் (ஞானம்) என்று எழுதியுள்ளோம்.

“தொழில்கால் தொண்டுமுக்கால்” என வாழும் வள்ளல் மெய்யப்பர், “தொழில் வளர்த்தேன், தொண்டு வளர்த்தேனே” என்று பணியாற்றுகிறார் என்று எழுதியுள்ளோம்.

சடையப்ப வள்ளல், சீதக்காதி வள்ளல், அண்ணாமலை வள்ளல், அழகப்ப வள்ளல் வரிசையில் நம் மெய்யப்ப வள்ளலும் இடம் பெறுகிறார் என்று எழுதியுள்ளோம்.

இவையெல்லாம் அவரது 70 நிறைவு விழா மலரில் எழுதியவை. வாழ்நாளில் நிறைவாக (கடைசியாக) அவர் நிறுவியது மெய்யப்பன் தமிழாய்வகம். தமிழ் ஆய்வுலகுக்கு வள்ளல் மெய்யப்பரின் கொடை.

வாழ்க! மெய்யப்பன் தமிழாய்வகம்.

Koviloor Digital Library

KOVILOOR ... LIBRARY, KOVILOOR
A. No. 14156

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை

கழகம் என்ற சொல், கழகம் என்ற பெயர் இந்நாளில் பாமர மக்களும் நன்கறிந்தது. படித்தவர்களுக்கேகூட அச்சொல் சரிவர விளங்காத காலத்தில் 1920-இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் தொடங்கப் பெற்றது. தமிழ் மொழி, இலக்கிய உலகில் கழகம் என்றால் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்தான். 85 ஆண்டுகால நிறுவனம். தொடங்கியவர் பத்மஸ்ரீ வ. சுப்பையா பிள்ளை மறைமலையடிகளாரின் மருமகன். வ. திருவரங்கம்பிள்ளையின் தம்பி. இப்போது வ. சுப்பையாபிள்ளையின் மருமகர் முனைவர் இரா. முத்துக்குமாரசாமி தலைவராக இருந்து நடத்தி வருகிறார். அவரது மகனார் மு. சுப்பையா தந்தைக்கு உதவுகிறார். பாட்டனார் சுப்பையாபிள்ளை, மருமகர் முனைவர் முத்துக்குமாரசாமி, பெயரர் மு. சுப்பையா என்று கழகம் மூன்று தலைமுறைகளைக் கண்டிருக்கிறது. பெரியவர் சுப்பையா பிள்ளை அவர்களையே நாம் அறிவோம். அவருக்கும் நமக்கும் நெருங்கிய பழக்கம் உண்டு.

பெயர்தான் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். சைவத்தோடு மட்டும் நிற்கவில்லை. பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் பதிப்பித்துள்ளது. பதிப்பித்ததோடு மட்டுமல்ல. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய பழந்தமிழ் நூல்களுக்குத் தனித்தனியே மாநாடு நடத்தியது. கலித்தொகை மாநாடு - குறுந்தொகை மாநாடு - அகநானூறு மாநாடு - மெய்கண்ட சாத்திர மாநாடு - நற்றிணை மாநாடு - தமிழ் உணர்ச்சி மாநாடு - புறநானூறு மாநாடு - பத்துப்பாட்டு மாநாடு - அரசியல் மாநாடு - தமிழ் ஆட்சி மொழி மாநாடு -

Koviloor Digital Library

பதினெண் கீழ்க்கணக்கு மாநாடு - சிற்றிலக்கிய மாநாடு - இப்படி ஐம்பதிற்கு மேற்பட்ட மாநாடுகள், விழாக்கள்.

மாநாட்டில் அறிஞர் வழங்கிய உரைகளைக் கட்டுரைகளாக்கித் தொகுத்து நூல்களாக வெளியிட்டுள்ளது. திருக்குறள், பெரியபுராண மாநாடுகள், சொற்பொழிவு நூல்கள் - இப்படியே மற்ற பற்பலவற்றிற்கும். பழந்தமிழ் நூல்களுக்கு ஒரு பதிப்பகம் என்றால் அந்நாளில் அது கழகந்தான். பழந்தமிழ் நூல்களையெல்லாம் உரையோடு பதிப்பித்தது. கழகப் புலவர்குழு என்றே ஒரு குழு இருந்தது. அன்று அதில் அழகரடிகளார், கழகப் புலவர் இராமநாதபிள்ளை போன்றோர் இருந்தனர். இன்று புலவர் இளங்குமரனார் போன்றோர் உள்ளனர்.

விவிலியத்திற்குக் கிறித்துவர்கள் விதவிதமான பதிப்புகளை வெளிப்படுத்துவது போன்று திருக்குறளுக்கு விதவிதமான பதிப்புகளைக் கழகம் வெளியிட்டது. தீப்பெட்டித் திருக்குறள் என்று புகழ்பெற்றது தீப்பெட்டி அளவில் உள்ள பதிப்பு.

36 ஆண்டுகளுக்கு முன்பே 1969-இல் டாக்டர் சாகிர்உசேன் குடியரசுத் தலைவராக விளங்கிய காலத்தில் கழகஆட்சியர் வ. சுப்பையா பிள்ளைக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பெற்றது. பதிப்புலகில் ஒரே பத்மஸ்ரீ வ. சுப்பையாபிள்ளைதான்.

1923-இல் செந்தமிழ்ச்செல்வி என்னும் திங்களிதழைத் தொடங்கி இன்றுவரை 82 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. மறைமலையடிகளாரின் மறைவுக்குப்பின், அவரது சொந்த நூலகத்தைப் பெரிய அளவில் விரிவாக்கி, மறைமலையடிகள் நூலகம் என்ற பெயரில் ஒரு பெரிய சிறந்த நூலகத்தை நடத்தி வருகிறது. இன்று மறைமலையடிகள் நூலகம் உள்ள இடம்தான் வள்ளலார் இராமலிங்கர் சிறுபருவத்தில் முதன்முதலில் சொற்பெருக்காற்றிய சோமு செட்டியார் வீடு. தமிழ் ஆய்வாளர்களுக்கு முதன்மை நூலகமாகத் திகழ்வது மறைமலையடிகள் நூலகமே. 1932-ஆம் ஆண்டு முதல் 73 ஆண்டுகளாகத் திருக்குறள் நாட்குறிப்பு என்றொரு நாட்குறிப்பை ஆண்டுதோறும் கழகம் வெளியிடுகிறது.

Koviloor Digital Library

சுருங்கக்கூறின் இந்தியப் பண்பாட்டுக்கு பாரதிய வித்யா பவன் போலத் தமிழுக்கு இது. தமிழ்நூல்கள், சைவ நூல்கள் அனைத்திற்கும் கழகம் ஒரு களஞ்சியம். இதுவரை பல ஆயிரம் நூல்களைக் கழகம் வெளியிட்டுள்ளது. கழகத்தால் தமிழ்ப் பண்பாடு வளர்ந்தது. கழகம் தமிழ்ப்புலவர் பலருக்கு வாழ்வளித்தது.

பெரியவர் வ. சுப்பையாபிள்ளை வயது முதிர்ந்த காலத்திலும் தமிழுக்காக ஓடிஓடிப் பணியாற்றினார். பல இடங்களுக்கும் சென்று படங்கள், ஆவணங்கள், பழம்பதிப்பு நூல்கள் போன்ற பலவற்றைத் தொகுத்தார்.

நாம் சென்னைக்குச் சென்றால் கழகத்திற்குப் போகாமல் திரும்பு வதில்லை. கழகத்திற்குப் போகாவிட்டால் நமக்குச் சோறு போகாது. தூக்கம் வராது. கழகத்திற்கும் எமக்கும் 1955 முதல் ஐம்பதாண்டு காலமாகத் தொடர்பு. இவ்வாண்டு 2005 எமது ஆய்வுக்கு மட்டும் பொன்விழா அன்று, கழகத் தொடர்புக்கும் பொன்விழா ஆகும். திருச்சிராப்பள்ளியில் இன்று கழகம் உள்ள இடம் நாம் பார்த்துக் கொடுத்ததே.

கழகத்தின் தலைமை இடம் (பதிவு அலுவலகம்) திருநெல்வேலி. சென்னையில் உள்ளது கிளைநிலையம் என்றாலும் பிரதான கிளை என்று சொல்லவேண்டும். மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம் நகரங்களிலும் கிளைகள் உள்ளன.

தமிழ்நூற் பதிப்பில் பழைமையும் முதன்மையும் வாய்ந்த கழகத்தின் ஆட்சியாளர் முனைவர் இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்தான் தென்னிந்திய நூற்பதிப்பாளர்களின் சங்கத்திற்குத் தலைவராக விளங்குகிறார்.

கழகம் வாழ்க! பணிகள் வளர்க!!

Koviloor Digital Library

பாரி நிலையம்
சென்னை

சங்க காலத்தில் ஒரு பாரி - பாரிவள்ளல். நம்முடைய காலத்தில் ஒரு பாரி - பாரிநிலையம் புத்தக வெளியீட்டாளர்கள்.

சென்னைக்குச் செல்லும்போதெல்லாம், கழகத்திற்கும் பாரி நிலையத்திற்கும் செல்லாவிடில் எம் தலைவெடித்துவிடும். சோறுபோகாது, தூக்கம் வராது. நாம் வாங்கிச் சேர்த்து வைத்துள்ள நூல்களிற் பெரும்பாலானவை கழகத்திலும் பாரியிலும் வாங்கியவையே.

சென்னையில் நமக்கு இரண்டு புத்தகக் கடைகள் வாடிக்கை. கழகம், பாரி. இவ்விரண்டோடும் எமக்கு ஐம்பதாண்டுகாலத் தொடர்பு. இவ்வாண்டு 2005 எமது ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழா ஆண்டு மட்டுமன்று, கழகம், பாரி தொடர்புக்கும் பழக்கத்திற்கும்கூடப் பொன்விழா ஆண்டு.

மு.வ. நூல்களையெல்லாம் வெளியிட்டது பாரிநிலையம். திரு.வி.க. நூல்களிற் பலவற்றை வெளியிட்டது பாரிநிலையம். எல்லாத் துறைகளிலும் பாரிநிலையம் நூல்களை வெளியிட்டிருக்கிறது. தொடாத துறை இல்லை.

பாரிநிலையம் செல்லப்பர் பிறந்த ஊர் அரிமளம். கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளின் சமாதிக்கோயில் அரிமளத்தில்தான் உள்ளது. கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் வள்ளலாரை நேரிற் கண்டவர். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் குரு. கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்க நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே நாம் அரிமளம் சென்றோம்.

Koviloor Digital Library

வடலூரில் சத்திய தருமச்சாலைக்கு நேர் எதிரே, சிறிது தள்ளி அமைந்துள்ள சத்திரம் அரிமளம் செட்டியார் குடும்பம் ஒன்றின் சத்திரம். அக்காலத்திலேயே அரிமளத்தார் ஒருவர் வடலூரில் சத்திரம் கட்டினார். தருமச்சாலைக்கு மிக அருகில் அமைந்த கட்டிடம் அதுதான்.

திருஅருட்பா பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு மிகவும் அற்புதமான பதிப்பு. அதன் விற்பனை உரிமை பாரி நிலையத்தினுடையதுதான். இப்படிப் பலவகையிலும் பாரி எம்முள்ளத்தில் இடம்பெற்றுள்ளது.

பாரி நிலையத்தின் உரிமையாளர் திரு க.அ. செல்லப்பன் அவர்களின் பிறந்தநாள் 19.07.1920. இப்போது அவருக்கு வயது எண்பத்தைந்து. அவரது பணிகளும் அனுபவங்களும் ஒரு தனிநூல் எழுதும் அளவுக்குச் சிறந்தவை. பாரிசெல்லப்பர் ஒரு சுயசரிதம் எழுதவேண்டும் என்பது எம் விருப்பம்.

கி.ஆ.பெ.வி. அவர்களுக்குப் பாரியை மிகவும் பிடிக்கும். எம்மிடம் பேசும்போதெல்லாம் பாரியைப் பற்றிய பேச்சுவரும். அந்நாளில் புலவர் அறிஞர் பலருக்குப் பொருளாதார வசதி ஏற்படக் காரணமாக இருந்தவை கழகமும் பாரியும்.

பாரியின் பணியைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். ஒன்றைச் சொல்லி நிறைவு செய்கிறோம். புத்தக வெளியீட்டில் பாரிக்கு என்று ஒரு தரம் உண்டு. *Parry Standard.* அத்தரத்திலிருந்து அது குறைவதில்லை.

பாரிநிலையம் வாழ்க!

பணிகள் வளர்க!

Koviloor Digital Library



பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை

இளமையில் நாம் முதன்முதலில் கண்ட புத்தகக்கடை திருச்சிராப்பள்ளி பழனியப்பா பிரதர்ஸ்தான். நாம் பிறந்து வளர்ந்து படித்து, பணியாற்றியது எல்லாம் திருச்சிராப்பள்ளியே. உயர்நிலைப்பள்ளி, கல்லூரிப் பருவத்திலேயே நல்ல தமிழ்நூல்களை வாங்கிப் படிக்கும் பழக்கம் எமக்கு ஏற்பட்டுவிட்டது. அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் நல்ல தமிழ்ப் புத்தகக்கடை பழனியப்பா பிரதர்ஸ்தான். கழகம் அப்போது திருச்சிராப்பள்ளிக்கு வரவில்லை. திருச்சிராப்பள்ளியில் கழகம் உள்ள இடமும் நாம் பார்த்துக் கொடுத்ததுதான்.

பழனியப்பா பிரதர்ஸ் புத்தகக்கடையில் நாமும் கோனார் ஐயாவும் சந்தித்து மகிழ்வோம். வித்துவான் திரு மு. ஐயன்பெருமாள்கோனார் திருச்சிராப்பள்ளியில் தலைமையான தமிழ்ப்புலவர். நமக்கு நண்பர். புகழ்மிக்க கோனார் நோட்ஸ் பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடே. நண்பர் திருச்சிராப்பள்ளி லால்குடி ஜி. வரதராஜபிள்ளை, திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றுக்குமே உரை எழுதினார். அச்சிடும் காலத்தில் நாமும் உடனிருந்தோம். இவை மூன்றும் பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடுகளாக வெளிவந்தன.

இலங்கை அறிஞர், சி. லட்சுமணன் எழுதிய இந்திய தத்துவ ஞானம் மிகச் சிறந்த நூல். பழனியப்பா வெளியீடு. சேதுப்பிள்ளை, நாமக்கல் கவிஞர் முதலியோர் நூல்களைப் பழனியப்பா வெளியிட்டது.

Koviloor Digital Library

பழனியப்பா பிரதர்ஸ் பெரியவர் திரு எ.எம். பழனியப்ப செட்டியார் அவர்களைவிடத் திருச்சிராப்பள்ளிக் கிளை திரு எம். செல்லப்பன் அவர்களே நமக்கு நன்கு பழக்கம். 50 ஆண்டுப் பழக்கம்.

நம் ஊர் சமயபுரம். வசித்தது சமயபுரத்திலும், ஸ்ரீரங்கத்திலும். சமயபுரத்திலிருந்து, ஸ்ரீரங்கத்திலிருந்து, நாம் திருச்சிராப்பள்ளிக்குப் போயிருக்கிறோம் என்றாலே பழனியப்பாவுக்குத்தான் என்று பொருள். புத்தகக்கடை, கதர்க்கடை இரண்டு கடைகளைத் தவிர வேறு கடைகளில் எமக்கு வேலை இல்லை. தங்குமிடம் மாயவரம் லாட்ஜ். அச்சுப்பணிகள் ஜோதி பிரிண்டர்சில் நடக்கும். பிற்காலத்தில் நாம் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் அலுவல் பார்த்தபோது, பழனியப்பா பிரதர்ஸ் புத்தகக் கடைக்குள் செல்வது மிகவும் அதிகமாகிவிட்டது. இன்றும் வடலூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் சென்றால் பழனியப்பாவுக்குப் போகாமல் வருவதில்லை.

நாமறிந்த முதல் புத்தக வெளியீட்டு நிறுவனத்தைப் பாராட்டி மகிழ்கிறோம்.

பழனியப்பா பிரதர்ஸ் வாழ்க! வளர்க!!

Koviloor Digital Library



வானதி பதிப்பகம்
சென்னை

சென்னையில் அருட்செல்வர் அவர்கள் இராமலிங்கர் பணிமன்றத்தைத் தொடங்கியபின் புதிதாகப் பலருடைய பழக்கம் ஏற்பட்டது. அதில் வானதியும் ஒன்று.

வானதி அண்மையில் 10.04.2005-இல் தன் பொன்விழாவைக் கொண்டாடி விட்டது. வானதியின் பொன்விழாவும் நம் ஆராய்ச்சி நிலையத்தின் பொன் விழாவும் ஒரே ஆண்டில் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியது. வானதி தொடங்கப்பட்ட ஆண்டிலேயே நாமும் ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கியிருக்கிறோம்.

வானதி, புத்தகக்கடை அன்று, புத்தகக்கடல். நூற்கடல் கோபாலையர் என்று ஒரு பெரியவர் இருக்கிறார். அதைப்போன்று புத்தகக்கடல் வானதி என்று சொல்லலாம்.

காஞ்சி பெரியவர் பரமாசாரியரின் உரைத்தொகுப்புகள் தெய்வத்தின் குரல் ஏழு தொகுதிகளையும் ஒருவர் படித்துவிட்டால் வேறு எதனையும் படிக்க வேண்டியதில்லை. வேறு எதனாலும் அறியஇயலாத அரியபெரிய விடயங்கள் அவ்வேழு தொகுதிகளில் உள்ளன. அவை வானதியின் வெளியீடுகளே.

கவிஞர் வாலியின் நூல்கள் வானதியின் வெளியீடே. கவிஞர் வாலி ஸ்ரீரங்கத்தில் எம் இளமைக்கால நண்பர். அக்காலத்தில் அவருடைய நாடகங் களில் நாம் நடித்ததை நாமும் இந்த நூற்றாண்டும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உதயமூர்த்தியால் வானதிக்குப் புகழா, வானதியால் உதயமூர்த்திக்குப் புகழா என்று ஒருபட்டிமன்றமே நடத்தலாம்.

வானதியைப் பாராட்டுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

வானதி பதிப்பகம் வாழ்க!

புத்தகவித்தகர் வானதி திருநாவுக்கரசு வாழ்க!!

Koviloor Digital Library



மணிவாசகர் பதிப்பகம்
சென்னை

மணிவாசகர் பதிப்பகத்தின் நிறுவனர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களின் தந்தையார் சண்முகம் செட்டியார் எம் நண்பர். மணிவாசகர் பதிப்பகத்துடன் தொடர்பு ஏற்படுவதற்குமுன்பே பதிப்பக நிறுவனரின் தந்தையார் தொடர்பு ஏற்பட்டிருந்தது. பதிப்பகத் தொடர்பும் மெய்யப்பன் அவர்களின் தொடர்பும் அதைத் தொடர்ந்தது.

1961-இல் தொடங்கப் பெற்ற மணிவாசகர் பதிப்பகம் இதுவரை 1500 நூல்களை வெளியிட்டுள்ளது.

மெய்யப்பனாருக்கும் எமக்கும் ஒரே வயது. எம்மைவிட ஒருமாதம் அவர் இளையவர். அவர் பிறந்தநாள் 21.06.1933. நாம் பிறந்த நாள் 22.05.1933.

மெய்யப்பனாரின் பணிகள் பல திறத்தவை. நூல் வெளியீடு, நோட்ஸ் வெளியீடு தவிரப் பிற பல பணிகளையும் மெய்யப்பனார் செய்திருக்கிறார். பல்கலைக்கழகங்கள் பலவற்றில் சொற்பொழிவுக்கான அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங் களுக்குப் பத்தாயிரம் நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சிதம்பரத்தில் அவரது இல்லம் கலைக்கூடமாகத் திகழும். அறிஞர் பலர் சந்திப்பு அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும்.

Koviloor Digital Library

தொழில் கால், தொண்டு முக்கால் என்று இவர் பணி செய்வதாக நாம் பாராட்டியிருக்கிறோம். இவர் வெளியிட்ட மலர்களிலெல்லாம் எம்மனந்திறந்த பாராட்டுரையைக் காணலாம்.

குன்றக்குடி அடிகளார் நூல்கள் அனைத்தையும் ஒரே அளவில் பதினாறு தொகுதிகளாக வெளியிட்டது சிறந்த சாதனை. சங்க இலக்கியக் களஞ்சியம், சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், நகரத்தார் களஞ்சியம் என்று ஒரு களஞ்சிய வரிசையையே உருவாக்கி வெளியிட்டது பெரும் சாதனை.

மெய்யப்பனாரை இவ்வளவு விரைவில் இழந்துவிடுவோம் என்று கனவில்கூட நாம் எண்ணவில்லை. அவர் அமரராகிவிட்டது எமக்குப் பெரிய இழப்பு. ஊக்குவிக்கும் நண்பர் ஒருவர் சமவயதுள்ளவர் போய்விட்டார் என்பதை இன்றுங்கூட எம்மால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

மகன் மீனாட்சிசோமசுந்தரம், நன்கு பயிற்சி பெற்றுவிட்டான், தென்னிந்தியப் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் செயலாளராகி நன்கு பணி செய்கிறான், குருமூர்த்தி போன்ற உதவியாளர் ஒருவர் கிடைப்பது அருமை என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டுக் கட்டாய ஓய்வுக்கு ஆளாகிவிட்டதை எண்ணும்போது எமக்கு மனம் பொறுக்கவில்லை.

அதிக வேலைப்பளு அவரை நோய்வாய்ப்படுத்தி அமரராகச் செய்து விட்டது. எமக்கும் இதயப் பாதிப்பைக் கொடுத்தது.

மணிவாசகர் பதிப்பகத்தைப் பாராட்டும்போது ஏற்பதற்கு அவர் இல்லை. என்றாலும் அவருடைய திருமகன் மீனாட்சிசோமசுந்தரமும் குருமூர்த்தியும் இருக்கிறார்கள்.

மெய்யப்பனார் புகழ் வாழ்க!

மணிவாசகர் பதிப்பகம் வளர்க!!

Koviloor Digital Library



உமா பதிப்பகம்

சென்னை

பொன்விழாவில் பாராட்டப்பெறும் ஆறு பதிப்பகங்களில் உமாபதிப்பகம் தான் இளைய பதிப்பகம். 12.02.1987-இல் தொடங்கப்பெற்றது. இக்காலத்திய பிள்ளைகளுக்கு, இளைஞர்களுக்கு, அறிவாற்றல் அதிகம். அதைப்போல் இளைய பதிப்பகமாகிய உமா பதிப்பகமும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்துத் திருமுறைகளை உரையுடன் வெளியிட்டுள்ளது. 11-ஆம், 12-ஆம் திருமுறைகள் அண்மையில் வெளிவரவுள்ளன. இப்பெருநூல்களின் வெளியீடு மிகப்பெரிய சாதனை.

செந்தமிழ் வேள்விச்சதுரர் மு.பெ. சத்தியவேல்முருகனார் எழுதிய செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல், வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள் என்னும் நூல்கள் இரண்டும் உமா பதிப்பக வெளியீடு. குடநீராட்டு நன்னூல் எமது அணிந்துரையைப் பெற்றது. வெளியீட்டு விழா எம் தலைமையில் நிகழ்ந்தது.

தமிழகச் சுற்றுலாமையங்கள் என்ற நானூறு பக்க நூல் சுற்றுலாவுக்கு நன்கு பயன்படும் நூல்.

பல்வேறு துறையிலும் நல்ல நூல்கள் பலவற்றை வெளியிட்டு, விரைந்து வளர்ச்சிபெற்று வரும் உமா பதிப்பக நிறுவனர் திரு இராம. லெட்சுமணன் 12.01.1950-இல் தேவகோட்டையில் பிறந்தவர். தேவகோட்டையில் கோயில்பணிகளிலும் இவர் பங்கு சிறப்பானது.

தமிழ்நூல் வெளியீட்டாளர் விற்பனையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இராம. லெட்சுமணன் பணியாற்றி வருகிறார்.

உமாபதிப்பகம் வளர்ந்து வருவதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

உமா பதிப்பகம் வாழ்க! வளர்க!!

Koviloor Digital Library



சன்மார்க்க ஞானி

சுவாமி சரவணானந்தா

சத்தியஞானகோட்டம், திண்டுக்கல்

19.11.1910–இல் பிறந்த சுவாமி சரவணானந்தா அவர்கள் சன்மார்க்க உலகிலேயே மூத்த அனுபவஞானி. 95–ஆம் அகவையிலும் அகவல் விளக்கமே அவரது பேச்சும் மூச்சுமாக உள்ளது.

முதல்முதலில் அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கு உரைகண்ட பெருமைக்குரிய பெரியவர். திருவருட்பாவின் பல பகுதிகளுக்கு உரை கண்டவர்.

திருவருட்பா உரைநூல்களில் இவர்களது நூல்களே எண்ணிக்கை மிகுதி.

முதுபெரும் சன்மார்க்க ஞானி சுவாமி சரவணானந்தா

அவர்களைப் போற்றி மகிழ்கிறோம்!

சுவாமி சரவணானந்தா அவர்கள் வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



சிவஸ்ரீ சுதானந்த சரஸ்வதி சுவாமிகள்

வல்லநாடு

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு என்ற ஊரில் சாது சிதம்பர சுவாமிகள் என்றொரு சித்தர் விளங்கினார். வள்ளற் பெருமான் அவதரித்த மருதூரில் பெருமான் இல்லத் திருப்பணியை அக்காலத்தில் முதன்முதலில் வல்லநாட்டுச் சித்தர்தான் தொடங்கினார். பின்னர் அப்பணி வேறு அன்பர்களால் நிறைவேற்றப்பெற்றது.

சாது சிதம்பர சுவாமிகளின் காலத்திற்குபின் அவருடைய இடத்தில் இப்போது இருப்பவர்கள் சிவஸ்ரீ சுதானந்த சரஸ்வதி சுவாமிகள். சிதம்பர சுவாமிகள் 1008 தீப ஜோதி வழிபாடு நடத்தும் பழக்கமுள்ளவர். அதை அவர் காலத்திற்குப் பின்னும் சிறப்பாக நடத்த ஏறத்தாழ ஒன்றரைக் கோடிரூபாய் செலவில் அருள்ஜோதி ஆனந்த சபையை இப்போதுள்ள சிவஸ்ரீ சுதானந்த சரஸ்வதி சுவாமிகள் கட்டியுள்ளார். வல்லநாடு சித்தர் குருபீடத்தில் நடைபெறும் விழாக்களில் மிகப்பெரிய அளவில் அன்னதானம் செய்கிறார். பெரும் பணிகளைச் செய்வதில் ஆர்வமிக்கவர். தென்மாவட்டங்களில் சுவாமிகளால் சன்மார்க்கம் நன்கு பரவி வருகிறது.

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் ரூபாய் இரண்டு லட்சம் செலவில் ஆழ்குழாய்க் கிணறு எடுத்து 24.01.2005 தைப்பூச விழாவில் தொடங்கிவைத்து தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்த்தார். இப்புண்ணியச் செயலுக்காகச் சுவாமிகளைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

வள்ளலார் அடிமை

சுவாமி பத்மேந்திரா

நாகர்கோயில்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் வடசேரி பகுதியில் சன்மார்க்க சங்கம் நிறுவி நாள்தோறும் வழிபாடு, வாரவழிபாடு, மாதப்பூச வழிபாடு செய்து வருவதோடு ஆண்டுதோறும் சன்மார்க்க எழுச்சி மாநாட்டை நடத்தி வருகிறார். எழுச்சி மாநாட்டை ஒரு மாநில மாநாட்டைப் போன்றே சிறப்பாக நடத்துவார். நாள்முழுவதும் விழா. அனைவருக்கும் அறுசுவை விருந்து உண்டு. மிக ஆர்வமாகப் பணிசெய்கிறார். ஒரு அன்பர் திருக்கூட்டமே இவரோடு இணைந்து பணிசெய்கிறது. நாடெங்கும் நிகழும் சன்மார்க்க விழாக்களில் பரவலாகப் பங்கு கொள்கிறார். தென்மாவட்டங்களில் சன்மார்க்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வருகிறார்.

நம்முடைய பேரன்பர்களில் ஒருவர். வல்லநாடு சுவாமிகளின் பேரன்பர். அவருடன் இணைந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருபவர். அண்மைக் காலத்தில் அடிக்கடி வடலூருக்கு வந்து வழிபடும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளார். பணிகள் மேலும் மேலும் சிறக்கப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



கேப்டன்

மு. இராமசாமி முதலியார்

திருவாரூர்

1980-இல் நாம் மலேசியாவுக்குச் சென்றிருந்தபோது இவர்களைச் சந்திக்க நேர்ந்தது. மனோன்மணிவிலாச புத்தகசாலை என்றொரு புத்தகக் கடையை நடத்தி வந்தார். முதற் சந்திப்பே இனிமையாக அமைந்தது. குறிக்கோள் வாழ்வினரான கேப்டன் அவர்களை நமக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவ்வாறே நம்மை அவருக்குப் பிடித்துவிட்டது. அது முதல் இருவரும் நண்பரானோம்.

கேப்டனின் ஒரே மகனார் டாக்டர் ராஜாசந்திரசேகர் திருமணம் எம்முடைய தலைமையில் நிகழ்ந்தது. சில காலம் பின்னர் ஓர் விபத்தில் டாக்டர் ராஜா சந்திரசேகர் அமரரானார். ராஜாவின் பிரிவு பெற்றோர் உற்றார் உறவினரை மட்டுமன்றி நண்பர்களை மட்டுமன்றி, அவரை அறிந்த அனைவரையுமே உலுக்கிவிட்டது, உருக்கிவிட்டது. அதன்பின் மலேசியாவில் தன் கடமைகளை முடித்துக் கொண்டு முதலியார் திருவாரூருக்கே திரும்பிவிட்டார்.

மகனார் டாக்டர் ராஜா சந்திரசேகரின் நினைவாகத் திருவாரூர் மடப்புரத்தில் உள்ள குருதட்சிணாமூர்த்தி மடத்திற்கு ஒரு மண்டபத்தைக் கட்டிக் கொடுத்தார். மண்டபத் திறப்பு விழா எமது தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. நாமே மண்டபத்தைத் திறந்துவைத்தோம். கேப்டனின் எழுபதாம் அகவைவிழாவும் எமது தலைமையில் நிகழ்ந்தது. எண்பதாம் ஆண்டு நிறைவு முத்துவிழா 24.04.2003-இல் திருவாரூரில் சிறப்பாக நிகழ்ந்தது. அன்று ஆறு இலவசத் திருமணங்களை கேப்டன் முதலியார்

Koviloor Digital Library

நடத்திவைத்தார். ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூபாய் முப்பதாயிரம் செலவு, ஆறு திருமணங்களுக்கும் ஏறத்தாழ இரண்டு லட்சம் செலவு என்று அறிந்தோம். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையிலும் எமது (ஊரன் அடிகள்) முன்னிலையிலும் இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

நல்ல செயல்களுக்கெல்லாம் கேப்டன் முதலியார் வாரிவாரி வழங்குவார். கேட்காமலேயே குறிப்பறிந்து வழங்குவார். தாமே வலியவந்தும் வழங்குவார். சில நல்ல பணிகளுக்கு லட்சம் லட்சமாக வழங்கியுள்ளார். யாமறிந்தவரை இவரது கொடைகள் கோடிக்குமேல் இருக்கும்.

வடலூரில் கட்டப் பெற்றுள்ள திருவாரூர் சன்மார்க்க சங்கக் கட்டிடம் இவரது பெருங்கொடையால் ஆனது.

இளமையில் நேதாஜியின் தேசிய இராணுவத்தில் இவர் கேப்டனாக இருந்ததால் கேப்டன் இராமசாமி முதலியார் என்ற பெயர் வந்தது.

கேப்டனிடம் எமக்குப் பிடித்தவை குறிக்கோள் வாழ்வு. கொள்கைப் பிடிப்பு. சைவ உணவுக்கொள்கை பரவவேண்டும், வள்ளலாரின் சமரசம் ஜீவகாருண்யம் ஆகியவையே வருங்கால உலகுக்கு இன்றியமையாத தேவை என்பதை வாய்ப்பு நேரும்போதெல்லாம் வற்புறுத்திச் சொல்லி வருகிறார்.

கேப்டன் மு. இராமசாமி முதலியார் அவர்கள் வாழ்க!

குடும்பம், தொழில், தொண்டுகள் ஆகிய முத்திறத்தும்
மேலும் மேலும் நலன்கள் பெருகுக!

Koviloor Digital Library



நல்ல. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார்

வடலூர்

வடலூரில் காட்டுப்புத்தூர் ரெட்டியார் குடும்பம் ஒரு பெருங்குடும்பம். நல்ல குடும்பம். காட்டு ரெட்டியார் குடும்பம் என்று செல்லமாக வழங்குவார்கள். குடும்பத் தலைவர் திரு. என். நல்லப்ப ரெட்டியார் அவர்களையும் அவரது அருமைத் துணைவியார் காமாட்சி யம்மையாரையும் இவர்கள் செய்து வந்த தான தருமங்களையும் நாம் அறிவோம்.

இவர்களது திருமகனார் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் அவர்கள் நாம் வடலூருக்கு வந்த காலத்திலிருந்தே நம் நண்பர். இனிய இயல்பினர். நற்குண நற்செய்கைகள் மிக்கவர். "தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" என்பது ஔவையார் வாக்கு. தாயார் காமாட்சியம்மையாருக்கு ஜோதி இல்ல வளாகத்திலேயே தோட்டத்தில் கோயில் அமைத்துள்ளார். ஆண்டுதோறும் அம்மையார் நினைவு தின வழிபாட்டு நிகழ்ச்சிகள் - அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் - அன்னதானம் முதலியவை எமது தலைமையில் நடைபெறும். நம் பிறந்த நாள் மே 22. காமாட்சியம்மையாரின் நினைவு நாள் மே 21. இவ்விரண்டு நாள்களும் நாம் வேறு பணிகளில் ஈடுபடுவதில்லை. இப்பணிகளிலேயே இருப்போம்.

வடலூர்-கடலூர் நெடுஞ்சாலையில் குறிஞ்சிப்பாடியில் பத்மாவதி திருமண மண்டபம் என்றொரு அழகிய பெரிய திருமண மண்டபத்தை நம் கிருஷ்ணமூர்த்திரெட்டியார் சுமார் ஒருகோடி ரூபாய் செலவில் கட்டினார்.

Koviloor Digital Library

அதன் திறப்பு விழா 03.02.2003-இல் நம் தலைமையில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

திருமண மண்டப வளாகத்திலுள்ள அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கும் அன்றே குடநீராட்டு விழா தமிழ்முறைப்படி எமது தலைமையில் நிகழ்ந்தது.

எம்முடைய 70-ஆம் அகவை நிறைவு விழா, சென்னை, வடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் நிகழ்ந்தது. அதில் வடலூர் விழா, குறிஞ்சிப்பாடி பத்மாவதி திருமண மண்டபத்தில் தான் நிகழ்ந்தது (26.05.2003). ரெட்டியார் அவர்கள் மண்டபத்தில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும் வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும் அளிக்கப் பெற்ற பகல் உணவு அறுசுவை விருந்தையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இப்போது எமது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தின் பொன் விழாவாகிய இவ்விழாவும் நண்பர் திரு. நல்ல. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் அவர்களது பத்மாவதி திருமண மண்டபத்தில் தான் நிகழ்கிறது. மண்டப ஏற்பாட்டையும் அன்பர்களுக்கு அளிக்கப்பெறும் அறுசுவை விருந்தையும் ரெட்டியார் அவர்களே சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

ந. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் என்பதில் ந என்னும் தலைப்பெழுத்து நல்லப்ப ரெட்டியார் அவர்களைக் குறிக்கும். ந-நல்-என்பதைவிட நல்ல - என்பதே நல்லதாகத் தோன்றுகிறது. எனவே நல்ல கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் என வழங்கவேண்டும் என்பதை எம் 70 விழாவிலேயே நண்பர்களுக்கு அறிவித்தோம். அவ்வாறே இங்கு வழங்கியுள்ளோம்.

நண்பர் நல்ல கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் வாழ்க!

குடும்பம் தொழில்கள் தொண்டுகள்

ஆகிய முத்திறத்தும் மேலும் மேலும் நலன்கள் பெருகுக!!

Koviloor Digital Library



இல்லறஞானி
நா. பூமலை

விருத்தாசலம் - சேலம் நெடுஞ்சாலையில் விருத்தாசலத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள பரவளூர் ஒரு சிறந்த இல்லற ஞானியைச் சன்மார்க்க உலகுக்குத் தந்தது. பரவளூரில் திரு. நா. பூமலை அவர்கள் 1918 ஆகஸ்ட் 15-இல் பிறந்தார்.

கிராம மணியக்காரராகவும், கிராமப் பஞ்சாயத்துத் தலைவராகவும் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். அவரது ஒரே மகன் திரு. பூ. ஆசைத்தம்பி இப்போது பஞ்சாயத்து தலைவராக இருக்கிறார்.

அன்பர் பூமலை அவர்கள் திருக்குறள், திருமந்திரம், திருஅருட்பா இம்மூன்றிலும் ஈடுபாடு மிக்கவர். வள்ளுவரையும் வள்ளலாரையும் இரு கண்களாகக் கொண்டவர். வள்ளலாரின் பக்திக்கொள்கை, ஜீவகாருண்யக் கொள்கை, சீர்திருத்தக் கொள்கை ஆகிய மூன்றுமே பூமலையார் குடும்பத்தில் சிறந்து விளங்குகின்றன.

பூமலை அவர்களுக்கும் நமக்கும் ஏறத்தாழ முப்பதாண்டு கால நட்பு. அவரது பழக்கம் முதன்முதலில் உண்டான காலத்திலேயே அவர்மீது நமக்கு ஒரு மதிப்புணர்ச்சி உண்டாயிற்று. பல விஷயங்களில் அவர் நல்ல தெளிவுள்ளவர். கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மாவட்டங்களில் பரவலாகச் சன்மார்க்கக் கூட்டங்கள், சமயக் கூட்டங்கள், இலக்கியக் கூட்டங்கள் பலவற்றில் கலந்துகொண்டு, தலைமை வகித்தும், முன்னிலை வகித்தும், தனிச் சொற்பொழிவுகள் ஆற்றியும் நன்கு பணிசெய்து வருகிறார்.

Koviloor Digital Library

இவரது துணைவியார் திருமதி கங்கையம்மாள் அமரரான மார்கழி 8-இல் ஆண்டுதோறும் நினைவுவிழா நடத்தி அன்னதானம் ஞானதானம் ஆகிய இவ்விரு தானங்களையும் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். ஞானதானமாக நாம் எழுதிய நூல்கள் நான்கு வெளியாகியுள்ளன. வள்ளலார் அருளிய சன்மார்க்கக் கொள்கைகள் (1987), வள்ளலார் அருளிய நித்தியகருமவிதி, பேருபதேசம் (1996), வள்ளலார் வரலாறு கொள்கைகள் பாடல்கள் (2001), மனிதநேயமும் ஆன்மநேயமும் (2002), சாதியும் மதமும் (2003).

பூமலையாருக்குப் பெண்மக்கள் மூவர். நல்ல இடங்களில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். ஒரே குமாரர் திரு. பூ. ஆசைத்தம்பி பரணி நாளில் பிறந்தவர். தந்தையாரைப் போன்றே வேளாண்மை, பொதுப்பணிகள் ஆகிய இரண்டையும் நன்கு செய்து வருகிறார். ஆசைத்தம்பியின் துணைவியார் ஜோதிமணியும் வள்ளலாரிடம் பற்றுமிக்க குடும்பத்திற் பிறந்தவர். அவர் பிறந்த குடும்பம், புகுந்த குடும்பம் ஆகிய இரண்டுமே சன்மார்க்கப் பற்றுள்ள நல்ல குடும்பங்கள், ஆசைத்தம்பி ஜோதிமணி தம்பதியருக்கு கங்காதரன், காந்திமதி என இரண்டு பிள்ளைகள்.

"இல்லறஞானி" என்பது பூமலையாருக்கு நாம் வழங்கிய சிறப்புப் பெயர். அப்பெயராலேயே அவர் சிறப்பாக வழங்கப்பெற்று வருகிறார். மகன் ஆசைத்தம்பி, மருமகள் ஜோதிமணி, பேரன் பேர்த்தி கங்காதரன் காந்திமதி ஆகியவர்களுடன் இல்லறஞானியார் இனிதாக வாழ்ந்து வருகிறார். பலர் வாழ்வதற்கு வழகாட்டியாகவும் விளங்கி வருகிறார். நீடு வாழ்க!

குடும்பம், வேளாண்மை, தொண்டுகள் ஆகிய முத்திறத்தும் நலன்கள் மேலும் மேலும் பெருகுக!

வாழ்க! வாழ்க!

Koviloor Digital Library



வள்ளலார் மாணாக்கர் வழித்தோன்றல்
சி.எஸ். குப்புராஜ்

வள்ளலார் இளம்போதில் சென்னையில் வசித்த காலத்தில் பெருமானது நன்மாணாக்கர்களாகத் திகழ்ந்தவர்கள் சிலருள் குறிப்பிடத்தக்க ஒருவர் திருமழிசை முத்துசாமி முதலியார்.

''முத்துசாமிக் கவிக்குரிசில்'' என்று சாற்றுக்கவியிலும் ''முதறிவாளன் முத்துசாமி'' என்று குடும்ப கோரத்திலும் வள்ளற்பெருமானால் பாராட்டப் பெற்றவர். திருவருட்பா அச்சிடப்பெற்று நூலாக வெளிவருவதற்கு முன்பே திருவருட்பாப் பாடல்களைத் திருவொற்றியூர்க் கோயில் சந்நிதியில் பாடிப் பரப்பியவர். ''திருஒற்றிச் சிவபெருமான்... சந்நிதி முன்னர்ப் பகர்ந்து பத்தி வித்தினனே'' என்று தொழுவூர் வேலாயுத முதலியார் குறிப்பிடுகிறார். பின்னாளில் அருட்பா மருட்பா வாதங்கள் நிகழ்ந்த காலத்திலும் அருட்பாவின் வெற்றிக்குப் பாடுபட்டவர் முதறிவாளன் முத்துசாமிக் கவிக்குரிசில்.

முத்துசாமி முதலியாரின் வம்ச பரம்பரையில் வருபவர் நம் குப்புராஜர். தமிழகம் முழுவதற்கும் பொதுப்பணித்துறைக்கு ஒரே தலைமைப் பொறியாளர் இருந்து வந்த அந்த நாள்களில், தலைமைப் பொறியாளராகப் பணியாற்றியவர். அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னும் இன்று வரை ஓய்வின்றி நல்ல பல பணிகளைச் செய்து வருபவர்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் துணைத்தலைவராக விளங்கியவர். சைவ-சன்மார்க்கப் பாலமாக விளங்குபவர். சைவ-சன்மார்க்க சிந்தனை மேடை என்ற ஒரு நல்லமைப்பைத் தம் இல்லத்திலேயே நடத்தி வருபவர்.

Koviloor Digital Library

கங்கை காவிரி இணைப்பு, தென்னக நதிகளின் இணைப்பு ஆகியவற்றிலும், இதுபோன்ற இன்னும் பல பொது விஷயங்களிலும் தினமணி நடுப்பக்கக் கட்டுரை மன்னராக இன்று திகழ்பவர்.

நமது உழுவலன்பர். இவரது 75 நிறைவுவிழா 31.12.1998-இல் சென்னையில் நம்முடைய தலைமையில் நிகழ்ந்தது. 05.01.2004-இல் நிகழ்ந்த 80 முத்துவிழாவிலும் நாம் இவரது நூல் ஒன்றை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினோம்.

அவ்வப்போது சமயம் நேரிட்ட போதெல்லாம் வள்ளலார் விழாக்களை நடத்தி மகிழும் குப்புராஜர் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு கரத்தரங்கை நடத்தினார். குப்புராஜரின் ஏற்பாட்டில் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் நாம் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளை நூல்களாக வெளியிட்டுள்ளார். ''சைவசித்தாந்தமும் சமரச சுத்த சன்மார்க்கமும் ஒப்பாய்வு''; சமரச சுத்த சன்மார்க்கத்தின் தோற்றமும் 133 ஆண்டுகால வளர்ச்சியும் (1865-1988) என்று இருநூல்கள் பெருமன்ற வெளியீடுகளாக 1997; 1998-ஆம் ஆண்டுகளில் குப்புராஜரால் வெளியிடப் பெற்றன.

பெருமன்ற வரலாற்றை ஒரு நூலாக எழுதிக் குப்புராஜர் வெளியிட்டுள்ளார். சிறியதும் பெரியதுமாகப் பல நூல்களை வெளியிட்டுள்ள குப்புராஜர் தமது வாழ்க்கைக் குறிப்புகளையும் எழுதி வெளியிட வேண்டும் என்பது எம் விருப்பம்.

விஸ்வேஸ்வரய்யா போன்று குப்புராஜர் நூற்றொரு ஆண்டுகள் நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறோம்!

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



அருட்பா மணி
ந. விசுவநாதன்

1913-இல் நாகப்பட்டினத்தில் பிறந்தவர்.

வள்ளற்பெருமானின் சீடர் காரணப்பட்டு சமரச பஜன ச.மு. கந்தசாமி பிள்ளை. அவருடைய மாணாக்கர் நாகை அருட்பா அட்டவணை இரத்தினம் பிள்ளை. அவருடைய மாணாக்கர் அருட்பா மணி விசுவநாதன்.

1957 முதல் வடலூரில் நிலையாக வசிக்கிறார்.

வடலூர் வள்ளலார் தெய்வநிலையத்தின் ஆஸ்தான வித்துவான் என்று இவரைக் கூறலாம்.

அகவற்பாராயணம் அருட்பா முற்றோதல் முதலியவற்றை இவரே முன்னின்று நடத்தி வருகிறார்.

இன்று வடலூரில் வசிக்கும் வள்ளலார் தொண்டர்களில் வயதில் மூத்தவர் அருட்பா மணி அவர்களே.

திருஅருட்பா இசைச் சங்கத்தின் நிறுவனங்களில் ஒருவர். அதன்முதல் செயலாளர். இருபது ஆண்டுகளாக இசைச் சங்கத்தை நன்கு வளர்த்து வருகிறார். இவ்வாண்டு இசைச்சங்கத்தின் இருபதாவது ஆண்டுவிழாவைச் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளார்.

92 வயதுள்ள அருட்பா மணியின் பணிகளுக்கே ஒரு மணிவிழாக் கொண்டாட வேண்டும்.

அருட்பா மணி அவர்களின் அறுபதாண்டுகளுக்கு மேற்பட்ட சன்மார்க்கப் பணிகளைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



பி. இராதாகிருஷ்ணன்

வடலூர்

வடலூரில் இருபது ஆண்டுகளாக இயங்கிவரும் திருஅருட்பா இசைச் சங்கத்தின் தலைவர். ஆண்டுதோறும் வைகாசி 11;12;13 ஆகிய மூன்று நாள்கள் திருஅருட்பா இசைவிழா நிகழும். இவ்வாண்டு இருபதாம் ஆண்டுவிழாவாக இசைவிழா நிகழ்கிறது. விழாவின் மூன்று நாளும் அன்னம்பாலிப்பு தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்களது கைங்கர்யம்.

வடலூரில் உள்ள ராதா தொழில் வர்த்தக நிறுவனங்களும் நெய்வேலியில் ராதா ஹோட்டலும் இவருடைய நிறுவனங்கள். சென்னையிலும் நிறுவனங்கள் உண்டு. மிகவும் அடக்கமாக ஒழுகுபவர். ஓ.பி.ஆர். அவர்களின் ஆசியைப் பெற்றவர். ஓ.பி.ஆர். கொடுத்த இடத்தில் பெட்ரோல் பங்க் நிறுவி, ஓ.பி.ஆர். ஆசியால் வளர்ந்தவர்.

பிறப்பால் வைணவ மரபினர். வைணவ திவ்விய தேசங்கள் 108-இல் 106-ஐ இவர் தரிசித்திருக்கிறார். இரண்டு திவ்ய தேசங்கள், திருப்பாற்கடல் திருவைகுந்தம் (பரமபதம்) நிலவுலகில் தரிசிக்க இயலாதவை. விண்ணுலகில் உள்ளவை. இவ்விரண்டைத் தவிர ஏனைய 106 தலங்களையும் தரிசித்தவர்கள் மிக அரியர். 108 திவ்ய தேசத் தலயாத்திரை எளிதன்று. நம் இராதாகிருஷ்ணன் 108-ஐயும் (106ஐ) தரிசித்தவர். இராதாகிருஷ்ணரைக் கண்டாலே பெருமாளைக் கண்டதைப் போல. பக்தியும் அடக்கமும் உள்ள இத் தொழிலதிபர் நம் உள்ளத்துக்கு மிகவும் உவப்பானவர். ஓ.பி.ஆர். உள்ளத்தில் இடம்பெற்ற இவருக்கு

Koviloor Digital Library

அக்காலத்திலேயே நம் உள்ளத்திலும் இடமுண்டு. ஓ.பி.ஆர். இவரைப் பற்றி எம்மிடம் போற்றிக் கூறியுள்ளார். ஓ.பி.ஆரிடம் நல்ல பெயர் பெறுதல் மிகவும் அரிது. இவர் நல்ல பெயர் பெற்றவர். அருட்செல்வர் நல்ல பெயர் பெற்றவர் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நம்முடைய ஆராய்ச்சி நிலையத்தின் 50 ஆண்டு நிறைவுப் பொன்விழாவும், திருஅருட்பா இசைச் சங்கத்தின் இருபதாம் ஆண்டு விழாவும் சேர்ந்து வரும் இவ்வாண்டில் நம் உழுவலன்பர் திரு. பி. இராதாகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம். நமது பாராட்டும் வாழ்த்துகளும் உரிய.

இராதாகிருஷ்ணன் வாழ்க! வாழ்க!!

எல்லா நலன்களும் மேலும் மேலும் பெருகுக!

Koviloor Digital Library

ஆ. தங்கராசு

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வடலூர்.

வடலூரரை ஒட்டி அதன் கிழக்கே உள்ளது சேராக்குப்பம் என்னும் ஊர். அவ்வூரில் அன்பர் திரு. ஆ. தங்கராசு அவர்கள் மிராஸ்தார். சிறந்த விவசாயி. வேளாண்மைப் பணியைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்து வருபவர். சேராக்குப்பம் ஊராட்சியின் தலைவராக இருந்தார். இப்போதுள்ள வடலூர் பேரூராட்சி அலுவலகக் கட்டிடம் முன்பு சேராக்குப்பம் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடமாக இருந்ததே. தங்கராசு தலைவராக இருந்தபோது கட்டியதுதான். பின்பு பார்வதிபுரம், சேராக்குப்பம், ஆபத்தாரணபுரம் ஆகிய மூன்று கிராமப் பஞ்சாயத்துகளும் ஒன்றாக இணைக்கப்பெற்று வடலூர்ப் பேரூராட்சி என்று ஒரே பஞ்சாயத்தாக ஆனது. வடலூர்ப் பேரூராட்சிக்கும் தங்கராசு தலைவரானார். இவர் பேரூராட்சித் தலைவராக இருந்த காலத்தில் செய்த அபிவிருத்திப் பணிகள் பலப்பல.

வடலூர், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தது. குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டுமுறை தங்கராசு சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். வடலூர்ப் பேருந்து நிலையம், குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம், வடலூரில் வாரச்சந்தை, வடலூரில் பெரிய அளவில் ஆழ்குழாய்கிணறு, வடலூர்ப் பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு மானியம், நகரப்பேருந்து வசதிகள் முதலிய பற்பல அபிவிருத்திப் பணிகள் இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இவரால் செய்யப்பெற்றன.

Koviloor Digital Library

வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு நாம் அறங்காவலர் குழுத்தலைவராக இருந்தபோது, இவர் எம்முடன் அறங்காவலராக இருந்தார். பின்னர் இரண்டுமுறை அறங்காவலர் குழுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று சிறப்பாகப் பணியாற்றினார். நாம் தலைவராக இருந்தபோது இவர் உறுப்பினராக இருந்தார். இவர் தலைவராக வந்தபோது நாம் உறுப்பினராக இருந்தோம். சத்திய தருமச்சாலைத் திருப்பணிக்குழுவின் தலைவராகப் பணியாற்றினார். வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு இவர் ஆற்றிய பணிகளில் மிகவும் சிறப்பானது. நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவன உதவியுடன் ஆழ்குழாய்க்கிணறு அமைத்துத் தண்ணீர் வசதி செய்ததாகும்.

அன்பர் தங்கராசு அவர்களுக்கும் எமக்கும் ஒரே வயது. இருவரும் 1933–ல் பிறந்தவர்கள். நம் பிறந்தநாள் 22.05.1933. தங்கராசர் பிறந்தநாள் 17–8–1933.

அறங்காவலர் குழுத்தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் திரு. தங்கராசு அவர்கள் ஆற்றிய பணிகளைப் பாராட்ட வேண்டுமென்பது எம் நீண்ட நாளைய விருப்பம். அவ்விருப்பம் நமது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழாவில் நிறைவேறுகிறது.

அன்பர் திரு. ஆ. தங்கராசு அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

எல்லா நலன்களும் மேலும் மேலும் பெருகுக!

வாழ்க! வளர்க!!

Koviloor Digital Library



கு. சிவசுப்பிரமணியன்,

பி.எஸ்ஸி., பி.எல்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வடலூர்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 1970-இல் ஒருநாள் பண்ணுருட்டி யிலிருந்து வடலூருக்குப் பேருந்தில் வந்துகொண்டிருந்தோம். இடையில் காடாம்புலியூர் பேருந்து நிறுத்தத்தில் ஓர் இளைஞர் பேருந்தில் ஏறி எம் அருகில் வந்து அமர்ந்தார். வள்ளலார் தெய்வ நிலையங்களைப் பற்றி எம்மிடம் விசாரித்தார். ஏதோ ஆலோசனை கூறுவார்போல் தோன்றிற்று. பார்ப்பதற்குத் தோற்றப் பொலிவுள்ளவராக இருந்தார். முகத்தில் ஒருவித அறிவுக்களை தெரிந்தது. தம்பிக்கு எந்த ஊர்? என்ன வேலை? என்று கேட்டோம். இதோ, பக்கத்தில் அடுத்த நிறுத்தத்தில் இறங்கப் போகிறேன், ஆபத்தாரணபுரம்தான் என்றார். என்ன வேலை என்றதற்குப் பஞ்சாயத்துத் தலைவர் என்றார். என்ன படித்திருக்கிறீர் என்ற கேள்விக்கு, பி.எஸ்ஸி., பி.எல். கடலூரில் வக்கீலாக இருக்கிறேன் என்றார். இந்தப் பதில்களை நாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அந்த ஊரில், பி.எஸ்ஸி., பி.எல். படிப்பு, வக்கீல் வேலை, பஞ்சாயத்துத் தலைவர் பதவி ஆகியனவெல்லாம் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியன அன்று. இவ்வளவுதான் எங்கள் பேச்சு. அதற்குள் ஆபத்தாரணபுரம் வந்துவிட்டது. அன்போடு அவ்விளைஞர் விடைபெற்றார். வாய்ப்பு நேரும்போது சந்திக்கலாம் என்று வாழ்த்துக் கூறி அனுப்பினோம்.

சில ஆண்டுகளுக்குப் பின் வள்ளலார் தெய்வ நிலையங்களுக்குப் புதிய அறங்காவலர்குழு அமைக்கப் பெற்றது. இரண்டாம் முறையாக நாம் அறங்காவலர். அறங்காவலர் குழுத் தலைவர். புதிய அறங்காவலர்கள்

Koviloor Digital Library

முதற்கூட்டத்திற்கு வந்தார்கள். அவர்களில் ஒருவரை முன்பே பார்த்த நினைவு வந்தது. அன்று பேருந்தில் சந்தித்த அதே இளைஞர். ஆபத்தாரணபுரம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. சிவசுப்பிரமணியன், பி.எஸ்ஸி., பி.எல்., அறங்காவலராக நியமனம் பெற்று எமது அறங்காவலர் குழுவில் உறுப்பினராகிவிட்டார்.

எம்மோடு அறங்காவலராக இருந்தார். திருமணம் ஆவதற்குமுன்பே அறங்காவலராக வந்துவிட்டார். அறங்காவலராக ஆனபின்தான் திருமணம் நிகழ்ந்தது. திருமணத்திற்குச் சென்று வாழ்த்தினோம்.

வடலூர் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தது. குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு இவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சட்டமன்றஉறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் தொகுதிக்கு நல்ல அபிவிருத்திப் பணிகள் பலவற்றைச் செய்தார்.

சத்திய தருமச்சாலையின் திருப்பணிக்குழுவிற்குத் தலைவராக இருந்து, தருமச்சாலைத் திருப்பணியை நன்கு நிறைவேற்றினார்.

படிக்கும் காலத்திலேயே பலநிலைகளில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றவர். டெப்டிக் கலெக்டர், மாவட்ட முன்சீப் பதவிகள் கிடைக்க இருந்தன. அரசியல் பணி, பொதுப்பணிக்காக அவற்றை வேண்டாம் என்று இருந்துவிட்டார்.

உத்தியோகத்திற்குச் சென்றிருந்தால் உயர்ந்த அதிகாரியாக ஆகியிருப்பார்.

இவருக்கு இரண்டே பெண்கள். இருவரும் டாக்டர்கள். நல்ல இடங்களில் திருமணம் நிகழ்ந்தது. பேரன் பேர்த்திகளோடு நிறைவான குடும்ப வாழ்க்கை. அடக்கமான அரசியல்பணி. பொதுப்பணி.

இளமையிலேயே நம்முடைய வாழ்த்துகளைப் பெற்ற குடும்பம். நம்மைவிடப் பத்துஆண்டுகள் இளையவர் 10.03.1944-இல் பிறந்த இவருக்கு இப்போது வயது 61. நூறு ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



செயல்வீரர்

இரா. செல்வராஜ்

வடலூர்

வடலூரில் வள்ளலார் நிறுவனம் முதலாவது.

ஓ.பி.ஆர். நிறுவனம் (சுத்த சன்மார்க்க நிலையம்) இரண்டாவது.

ஓ.பி.ஆர். தம் நிறுவனங்களை வயது முதிர்ந்த காலத்தில் அருட்செல்வரிடம் ஒப்படைத்தார். அருட்செல்வரும் நாமும் ஏற்று நடத்தினோம்.

ஓ.பி.ஆர். நிறுவனங்களின் பணிகளை விரிவாக்க வேண்டிய நிலையில் சக்தி சர்க்கரை ஆலையில் கேன் இன்ஸ்பெக்டராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த திரு. ஆர். செல்வராஜ் அவர்களை வடலூருக்கு வரவழைத்து சுத்த சன்மார்க்க நிலையத்தில் செயலாளர் பொறுப்பை ஒப்படைத்தோம்.

செயலாளர் செல்வராஜ் உண்மையிலேயே செயல் வீரர். சுத்த சன்மார்க்க நிலையத்துக்குச் செயலாளர். அதன் கல்வி நிறுவனங்களுக்குத் தாளாளர். மழவந்தாங்கலில்உள்ள கஸ்தூரிபா குஷ்ட நிவாரண நிலையத் திற்கும் செல்வராஜ் அவர்களே செயலாளர்.

செல்வராஜ் அவர்களின் செயலாண்மையில் ஓ.பி.ஆர். நிறுவனம் பன்மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளது.

வள்ளலார் குருகுலம் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக ஆகியுள்ளது. ஓ.பி.ஆர். நினைவு செவிலியர் பயிற்சிப்பள்ளி, மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி ஆகியவை புதிதாக ஏற்படுத்தப் பெற்றுள்ளன. டாக்டர் நா. மகாலிங்கம் சித்த வைத்தியக் கல்லூரிக்கும் ஏற்பாடாகியுள்ளது.

Koviloor Digital Library

மேலும் சில கல்வி நிலையங்கள் ஏற்படவுள்ளன. புதிய புதிய துறைகள் புதிய புதிய கட்டிடங்கள் எனப் பெருறகிக் கொண்டே இருக்கிறது.

1980-இல் செல்வராஜ் செயற் பொறுப்புக்கு வந்தார். 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 2005 அவருடைய வடலூர்ப் பணிகளுக்கு வெள்ளி விழா ஆண்டு எனலாம். 12.05.1945-இல் பிறந்த அவருடைய மணிவிழாவும் இவ்வாண்டில் இணைந்துகொண்டது. 12.05.2005 அன்று காலையில் திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோயிலில் திரு. இரா. செல்வராஜ் - திருமதி ஜெயலட்சுமி அம்மையார் மணிவிழா சஷ்டியப்தபூர்த்தி மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. மாலையில் எமது தலைமையிலும் கோவை சிவப்பிரகாச சுவாமிகள் முன்னிலையிலும் வரவேற்பு மிகவும் சிறப்பாக நிகழ்ந்தது.

அருட்செல்வரின் வெற்றிக்குக் காரணங்கள் பல. அவற்றுள் ஒன்று நல்ல செயலாளர்கள், நல்ல உதவியாளர்கள் வாய்த்திருப்பதாகும். செல்வராஜ் கோயம்புத்தூரில் சக்தி சுகர்சிலேயே பணியில் தொடர்ந்திருந்தால் இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சக்தி சுகர்சின் ஒரு கிளைக்கு ஜெனரல் மானேஜராக ஆகியிருப்பார். அதைவிடப் பெரிய பணி வடலூர்ப் பணி. அருட்செல்வர் அவர்களின் நேர்மேற்பார்வையில் அவரது பிரதிநிதியாக இருந்து வடலூர் நிறுவனங்களை வளர்த்துப் பெருக்கித் திறம்படப் பணியாற்றி வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

நமது ஆராய்ச்சிப் பணியின் பொன்விழாவில், செல்வராஜ் அவர்களின் இருபத்தைந்தாண்டுகால வடலூர்ப் பணிகளைப் பாராட்டி மகிழ்கிறோம். அன்பர் திரு. இரா. செல்வராஜ் அவர்கள் வாழ்க! அவரது அருமைத் துணைவியார் திருமதி ஜெயலெட்சுமி அம்மையார் வாழ்க! செல்வராஜ் தம்பதிகள் வாழ்க! வாழ்க! குடும்பம் வாழ்க! பணிகள் வெல்க!

Koviloor Digital Library



பாலம்
கலியாணசுந்தரனார்

கல்லூரி நூலகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பொதுப்பணி ஆர்வத்தால் திருமணம் வேண்டாம் என்று தியாகம் செய்தவர். வருவாய் முழுவதையும் கல்விப் பணிக்கே செலவிடுபவர்.

எதுவும் சொந்தமாக வைத்துக் கொள்ளாமல் மிக எளிய வாழ்க்கை நடத்துபவர்.

ரூபாய் முப்பது கோடி மதிப்புடைய அமெரிக்க விருதைப் பெற்றவர். அத்தொகை முழுவதையும் அப்படியே உலகக் குழந்தைகள் பல்கலைக் கழகம் நிறுவக் கொடுத்து விட்டார்.

தியாகத்தில் பாலம் கலியாணசுந்தரனாருக்கு ஈடு இணை ஒப்பு உயர்வு உலகில் வேறு எவரும் இல்லை. அவருக்கு அவரே ஒப்பு.

அவரைப் பற்றிக் கூறப்பெறுவதை யெல்லாம் உலகம் நம்ப மறுக்கும். அவ்வளவு உயர்ந்த பெரிய தியாக புருடர் அவர்.

உலகுக்கே ஒருவராகிய பாலம் கலியாணசுந்தரனாரைப் பாராட்டி
வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

முனைவர் ஔவை நடராசன்

தந்தையார் ஔவை துரைசாமிபிள்ளை அவர்கள் பழந்தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரையெழுதி உரைவேந்தர் எனப் பெயர் பெற்றார். தனயனார் ஔவை நடராசன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் சிறப்பைப் பெற்றார்.

தமிழக அரசின் தமிழ்த்துறைச் செயலாளர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்னும் இரண்டு பெரும் பதவிகளை வகித்த தமிழ்ப் பேராசிரியர் ஔவை நடராசன் ஒருவரே. வேறுயாருக்கும் இவ்வளவு பெரும் சிறப்பு அமையவில்லை.

அரசுப் பணிக்கு முன்னர் இராமலிங்கர் பணிமன்றத்தின் செயலாளராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் இப்போதும் பணிமன்றத்தின் அதன் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

24.04.1936-இல் பிறந்த ஔவையைப் பாராட்டி நூறு ஆண்டுகள் நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

டாக்டர் மே.செ. இராசமாணிக்கம்

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 15.10.1941-இல் பிறந்தவர். *M.B.B.S., M.S. (General), M.S. (Ortho), MNAMS., F.I.C.S., F.R.S.H. (London) M.C.H., M.D., M.A., Ph.D.* என்ற பட்டங்களையும் பட்டயங்களையும் பெற்றவர். எலும்பு மருத்துவ நிபுணர். ஈரோடு பேருந்து நிலையம் அருகில் வீரபத்திர வீதியில் உள்ள அருட்பெருஞ்ஜோதி மருத்துவமனை இவர் நிறுவி நடத்தி வருவது.

வள்ளலார் பக்தர். முருக பக்தர். அருட்பெருஞ்ஜோதி பக்தர். தேவார இசையிலும் திருப்புகழ் இசையிலும் திருவருட்பா இசையிலும் வல்லவர். வள்ளலார் நாடகம் நடத்துவதிலும் வல்லவர். பல இடங்களில் திருப்புகழ் இசை நடத்தி வருகிறார். சென்னை (1998), மொரிஷியஸ் (2001), கோலாலம்பூர் (2003) ஆகிய இடங்களில் நிகழ்ந்த கந்த முருகன் மாநாடுகளில் சொற்பொழிவோடு இசை நிகழ்ச்சியும் நடத்தினார். 1996 முதல் ஆண்டுதோறும் திருவையாறு தியாகப் பிரம்ம ஆராதனை விழாவிற் கலந்துகொண்டு பக்கவாத்தியங்களுடன் பாடுவார். தமிழில் பல நூல்களையும் ஆங்கிலத்தில் சில நூல்களையும் எழுதியுள்ள டாக்டர் எம்.சி. இசைமாணிக்கனார் பல்துறைவித்தகர். இவர் பெற்ற பட்டங்கள் விருதுகள் பல. சன்மார்க்க விஞ்ஞானி என்பது நாம் வழங்கிய பட்டம். மெய்ஞ்ஞானச் செய்திகளை விஞ்ஞான முறையில் விளக்குவதில் வல்லமையுடையவர். முன்பும் பலமுறை பாராட்டி வாழ்த்தியுள்ளோம். இப்போதும் நம் ஆய்வு நிலையப் பொன்விழா நாளில் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



நூற்கடல்
வே. கோபாலையர்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டித பட்டம் பெற்றவர்கள் மிகச் சிலரே இன்று நம்மிடை உள்ளனர். அவர்களுள் நூற்கடல் அகவையால் முதிர்ந்தவர். புதுச்சேரி இரா. திருமுருகன், மயிலாடுதுறை கு. சுந்தரமூர்த்தி ஆகிய இருவரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டித பட்டம் பெற்றவர்களே. அந்நாளில் இப்பண்டித பட்டப் படிப்புக்குப் பாடத் திட்டம் மிக அதிகம். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் படிப்புக்கும் பாடத்திட்டம் மிகுதி. பண்டித வித்துவான் பட்டத்திற்கு இணையாக வேறு எந்தத் தமிழ்ப் படிப்பையும் இன்று கூற இயலாது.

கோபாலையர் அவர்களுக்குத் தமிழ் நூல்களின் பெரும்பகுதி மனப்பாடம்.

மூவர் தேவாரம் மர்ரே ராஜம் பதிப்பு வெளிவராமல் நின்றுவிட்டது. அப்பணி புதுச்சேரியில் உள்ள பிரஞ்ச் இன்ஸ்டியூட் ஆப் இண்டாலஜியால் நிறைவு செய்யப்பெற்றது. அதன் பதிப்பாசிரியர் நூற்கடல் ஐயரவர்களே.

மூவர் தேவாரம் செம்பதிப்பைத் தொடர்ந்து "தேவாரம் ஆய்வுத்துணை" பெருநூலைத் தொகுத்துதவினார். பிரஞ்ச் இன்ஸ்டிடியூட் வெளியீடு. அதைப்போன்ற ஆய்வுத்துணை இன்னும் சிலவற்றிற்கு வெளிவர வேண்டும். முக்கியமாகத் திருவாசகத்திற்கு வரவேண்டும். நூற்கடல் ஐயரவர்களே செய்தால் நன்றாக இருக்கும்.

அண்மையில் தொல்காப்பியம் முழுவதும் பழைய உரைகள் அனைத்துடன் பதினான்கு தொகுதிகளாக வெளிவந்த ஒருபதிப்புக்கு நூற்கடல் பதிப்பாசிரியர் எனின் இவர்களது பணியின் பெருமை விளங்கும்.

நுண்மாண் நுழைபுலம் என்கிறார்களே, அதனை ஐயரிடத்துக் காணலாம். இத்தகையோர்க்கு நம் பல்கலைக்கழகங்கள் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும். நூற்கடல் அவர்களுக்கு நம் பாராட்டும் வாழ்த்துகளும் உரிய!

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



முனைவர் வை. இரத்தினசபாபதி

திருப்பாதிரிப்புலியூர் கரையேறவிட்ட குப்பத்தில் 09.06.1929-இல் பிறந்த இவர் இளமையில் ஞானியார் சுவாமிகளிடம் கல்வி கற்கும் பேறு பெற்றவர்.

திருச்சிராப்பள்ளியில், திருச்சி டுடோரியல் கல்லூரியில் விரிவுரையாளராக இவர் பணியாற்றியபோதே (1955) இவரை நாம் அறிவோம். ஐம்பதாண்டுப் பழக்கம். நம் ஆய்வு நிலையத்திற்குப் பொன்விழாவைப் போலவே இவரது பழக்கத்திற்கும் பொன்விழா.

கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத் துறைத் தலைவர்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறைத் தலைவர்

ஆகிய பணிகளில் சிறந்து விளங்கி ஓய்வு பெற்றவர்.

தமிழ், சைவம், தத்துவம் (பிலாசபி), வீரசைவம், வள்ளலாரின் சன்மார்க்கம் ஆகிய ஐந்து துறைகளிலும் இவர் வித்தகர். ஐந்துறை வித்தகர் *Five in One* என்று நாம் இவரைப் பாராட்டுவது வழக்கம்.

தமிழ்த்துறை, சைவசித்தாந்தத் துறை, தத்துவத்துறை ஆகிய மூன்று துறைகளிலும் தலைவராக இருந்தவர் (அதிலும் பல்கலைக்கழக அளவில்) இவர் ஒருவராகத்தான் இருக்கக்கூடும். பிறப்பால் வீரசைவர். ஆதலின் அதிலும் வித்தகமுடையவர். வள்ளலாரிலும் நாம் பாராட்டும் அளவுக்கு ஞானமுடையவர். முன்னமே நம்மால் பல இடங்களில் பலமுறை பாராட்டப்பெற்ற வைரசபாபதியை இப்போதும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

முனைவர் சுப. அண்ணாமலை

தேவகோட்டையில் நகரத்தார் மரபில் 10.10.1929-இல் பிறந்தவர்.

மதுரை, தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவரது இரண்டு சிறந்த பணிகளுக்காக நாம் இவரைப் பாராட்டுகிறோம்.

1. டாக்டர் பட்ட ஆய்வு

"இராமலிங்க அடிகளாரின் நூல்களில் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வேடு அளித்துச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார் (1968). இவரது டாக்டர் பட்ட ஆய்வேட்டை மும்பை, பாரதிய வித்யா பவன் (*Bharatiya Vidya Bhavan, Bombay*) நூலாக வெளியிட்டது. ஆங்கில நூல். *Life and Teaching of St. Ramalingar.* அக்காலத்தில் டாக்டர் பட்ட ஆய்வேடு ஆங்கிலத்தில்தான் எழுதி அளிக்க வேண்டும். இவரது ஆய்வேடு பாரதிய வித்யாபவன் நூலாக வெளியிடும் அளவுக்குத் தகுதிமிக்கது என்பதற்கே நமது பாராட்டு.

2. திருமந்திரம் மூலபாட ஆய்வுப் பதிப்பு

தமிழில் உள்ள அருள் நூல்களுள் திருமந்திரம் ஒரு தனித்தன்மை வாய்ந்த நூல். பல பதிப்புகள் வெளிவந்திருப்பினும், சுப. அண்ணாமலை அவர்களின் மூலபாட ஆய்வுப் பதிப்பைப் போன்று இதுவரை வெளிவரவில்லை. வெளிவந்துள்ள அனைத்துப் பதிப்புகளிலும் சமாஜப்

Koviloor Digital Library

பதிப்பே சிறந்தது. பெரிதும் வழக்கிலுள்ளது திருப்பனந்தாள் காசிமடத்துப் பதிப்பு. திருமந்திரத்தில் பாடபேதம் மிகுதி. இடைச் செருகல்களும் பல. பழமையான பதினைந்து ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட்டு ஆராய்ந்து இம் மூலபாட ஆய்வுப் பதிப்பை இவர் பதிப்பித்திருக்கிறார். கிடைக்கும் சுவடிகளே இவ்வளவுதான். பாரிஸ் நூலகத்திலிருந்தும் நுண்படம் எடுத்து வரவழைத்து ஆய்வு செய்திருக்கிறார். இம் மூலபாட ஆய்வுப்பதிப்பை சென்னை, திருவான்மியூர், கலாக்ஷேத்ரா சாலையில் உள்ள இந்தியப் பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம் (கோவிலூர் மடம் ஆதீன கர்த்தர் ஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் பேராதரவில்) வெளியிட்டுள்ளது. இப்பணிக்காகச் சுவாமிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் அகவை முதிர்ந்த காலத்திலும் இப்பெரும் பணியை நன்கு செய்திருப்பதற்காகப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



முனைவர் கு. சுந்தரமூர்த்தி

பண்டித வித்துவான் பட்டம் பெற்ற திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் திருப்பனந்தாள் காசிமடத்துக் கல்லூரியில் படித்தவர். அக்கல்லூரி யிலேயே பேராசிரியராகவும் முதல்வராகவும் (23+14) 37 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்று அதன் மேலும் நான்கு ஆண்டுகள் தாளாளராகப் பணியாற்றினார்.

தொல்காப்பியம் முதலிய பெருநூல்களைப் பழைய உரைகளுடன் புதிய விளக்கமும் எழுதிப் பதிப்பித்துள்ளார். தமிழ், சைவம் ஆகிய இரண்டிலும் முற்றத் துறை போய புலமையுடையவர். இன்னோசையோடு பாடல்களைப் பாடிச் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். இலக்கணம், இலக்கியம், சாத்திரம், தோத்திரம் ஆகிய நான்கு துறைகளிலும் வல்லவர். இத்துறைகளில் நூற்பணிகள் பல செய்திருக்கிறார். சொற்பொழிவுப் பணியும் செய்து வருகிறார்.

இவரது மணிவிழாப் பாராட்டு மயிலாடுதுறையில் 27.04.1990-இல் நிகழ்ந்த போது வாழ்த்தரங்கத்திற்கு நாம் தலைமை ஏற்றுப் பாராட்டினோம். பல ஆண்டுகளாகவே சுந்தரமூர்த்தியார் நம் பாராட்டிற் குரியவர். இப்போதும் பாராட்டி வாழ்த்துகிறோம். 14.4.1930-இல் பிறந்த இவருக்கு இப்போது அகவை 75. இன்னும் கால் நூற்றாண்டு வாழ்க!

Koviloor Digital Library



முனைவர் சோ.ந. கந்தசாமி

1980-இல் நாம் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றிருந்தபோது மலேசியாப் பல்கலைக்கழகத்தில் இவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்குதான் பழக்கம் ஏற்பட்டது.

நமது நல்லெண்ணத்திற்கும் மதிப்புக்கும் உரிய நூலாசிரியர்கள் மிகச் சிலரில் இவரும் ஒருவர். சிறந்த ஆய்வாளர். இவரது நூல்களை நாம் விரும்பிப் படிப்பதுண்டு. அண்மையில் வெளிவந்த இவரது நூல் இந்தியத் தத்துவக் களஞ்சியம் - மூன்று தொகுதிகள் - மெய்யப்பன் பதிப்பகம் - சிதம்பரம் - வெளியீடு, மிகச் சிறந்த நூல். சிக்கலான செய்திகளையும் தெளிவாக எழுதுதல் இவருக்குக் கைவந்த கலை.

செயங்கொண்ட சோழபுரம் இலையூரில் 15.12.1936-இல் பிறந்த இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மலேசியாப் பல்லைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங் களிலும் பணியாற்றி ஒய்வு பெற்று, உலகத் தமிழாராய்ச்சி நிலையத்திலும் பணியாற்றி, இப்போது தஞ்சையை உறைவிடமாகக் கொண்டு, சித்தர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கம் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

சிறந்த நூற்பணிகளுக்காகத் திரு. சோ.ந.க. அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

முனைவர் அரங்க. இராமலிங்கம்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றும் இவர் தியாகதுருகத்தில் 19.05.1954-இல் பிறந்தவர்.

இவரது தந்தையாருக்கு வயது 91. பெயர் : புலவர் ப. அரங்கசாமி. மைய மாநில அரசுகளின் நல்லாசிரியர் மற்றும் தேசிய விருதுகளைப் பெற்ற தமிழாசிரியர். தாயாருக்கு வயது 80. பழனியம்மாள். இருவரும் நலமுடன் உள்ளனர்.

பதினைந்து நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ள பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் அவர்கள் சித்தர்களின் மார்க்கத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி. சித்தர் இலக்கியங்களைச் சிறப்பு நிலையில் ஆய்ந்துவரும் அரங்க. இராமலிங்கம் அவர்களுக்கு நம் பாராட்டும் வாழ்த்துகளும் உரிய.

சித்தமார்க்க அனுபவம் சித்திக்க!

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

முனைவர் சி.வெ. சுந்தரம்

சென்னையில் சிந்தாதிரிப்பேட்டை மேனிலைப்பள்ளி பழம்பெரும் பள்ளி. அதில் தமிழாசிரியராகப் பணியாற்றி பணிநிறைவு கண்டவர் புலவர் சி.வெ. சுந்தரம். பள்ளித் தமிழாசிரியர் பணி நிறைவு பெறும் வரை புலவர். பணிநிறைவுக்குப் பின் இப்போது (2004-இல்) முனைவர், டாக்டர்.

வள்ளலாரின் மாலை இலக்கியங்கள் என்ற தலைப்பில் வள்ளற்பெருமானது திருவருட்பாவில் உள்ள அனைத்து மாலை களையுமே (37 மாலைகளையுமே) ஆய்வு செய்து ஆய்வேடு அளித்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். டாக்டர் பட்டம் பெற்ற சில நாள்களுக் குள்ளாகவே ஆய்வேடு நூல் வடிவமும் பெற்றுவிட்டது.

அழகரடிகளார், தேமொழியார் ஆகிய இருபெரியோர்களின் மாணவரான சித்தர்பாடி வெங்கடேச சுந்தரம் (பிறப்பு 09.01.1942) இன்னும் ஐம்பதாண்டுகள் குடும்பத்தோடு நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



முனைவர் இரா. திருமுருகன்

தமிழ்க்கொலையைச் சுட்டிக்காட்ட, தட்டிக்கேட்க ஒரே ஒருவர் தான் இருக்கிறார். அதுவும் புதுச்சேரியில் இருக்கிறார். தமிழ்நாட்டில் இல்லை. இரண்டு மாநிலங்களுக்கும் ஒரேஒரு திருமுருகன் தான் இருக்கிறார். மாவட்டத்திற்கு ஒரு திருமுருகனாவது வேண்டும்.

என் தமிழ் இயக்கம் என்ற இவரது நூல் ஐந்து தொகுதிகளும் எம்மை மிகவும் கவர்ந்தன. தாய்க்கொலை, எருமைத் தமிழர்கள், மொழிப்பற்று இல்லாத கழிசடைகள் என்பன போன்ற நூல்களை இவரால் தான் எழுத இயலும்.

இலக்கணப் புலமையோடு இசைப்புலமையும் மிக்க திருமுருகனார் பழங்காலத்துப் பரிபாடல் ஆசிரியர்களுடன் வைத்து எண்ணத்தக்கவர். நக்கீரர் பரம்பரை என்று கூறலாம். திருமுருகனாரின் தமிழியக்கம் தொடர்க. தமிழ்க்கொலை நிற்கும் வரை தொடர்க.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



பூம்புகார், தாசில்பண்ணை

இரா. இராஜசேகரன்

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றுக்கும் உரை எழுதிய திருச்சிராப்பள்ளி லால்குடி, ஜி. வரதராஜபிள்ளையின் குமாரர். 15.05.1942-இல் லால்குடியிற் பிறந்தவர். பூம்புகார் மேலையூர் தாசில்பண்ணை கே.எஸ். இராமலிங்கம் - இரா. கௌரி அம்மாள் தம்பதியரால் ஏற்பு மகனாகக் கொள்ளப் பெற்றவர்.

பூம்புகாரில் சீனிவாசா மேல்நிலைப்பள்ளியை நடத்தி வருபவர். "உழவாரம்" அமைப்பைத் தோற்றுவித்து நடத்தி வருபவர். எட்டு நூல்களை எழுதியவர். ஆறு நூல்களைப் பதிப்பித்தவர். பலரால் பாராட்டப்பெற்றவர். பட்டங்கள் பல வழங்கப்பெற்றவர். அண்மையில் பெரும்பணி ஒன்றைச் செய்துள்ளார். அப்பணிக்காகவே இவரை நாம் பாராட்டி வாழ்த்துகிறோம்.

சைவப் பெருவெளியில் காலம்
முதல் தொகுதி

என்றொரு ஆய்வுநூலை எழுதியுள்ளார். நர்மதா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது. சைவ வரலாற்றுக் களஞ்சியம் என்று கூறலாம். இரண்டாம் தொகுதியும் விரைவில் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

செய்துள்ள பணிகளைப் பாராட்டியும், இனிச் செய்ய வேண்டிய பணிகள் விரைவில் அவ்வப்போது வெளிவரவும் வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

"வள்ளுவர் வழி"

கல்லை தே. கண்ணன்

விழுப்புரம் மாவட்டம், கல்லக்குறிச்சியில் 10.06.1923-இல் பிறந்தவர். வணிகவரி அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சேலத்தில் இவர் பணியாற்றிய காலத்திலேயே (1967-70) இவரை நாம் அறிவோம். நேர்மையும் திறமையும் மிக்க அதிகாரி. வணிக வரித்துறை போன்றவற்றில் நேர்மையாக இருப்பது சிரமம். இவர் நேர்மையாக இருந்தார். அந்தப் பணியில் திருவள்ளுவர் இருந்தால் எப்படி இருப்பாரோ அப்படி இருந்தார். அப்போதே தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, கதர்அணிதல், திருக்குறள் பணி இவரிடம் உண்டு.

தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது 1993-இல் இவருக்கு வழங்கப்பெற்றது. அப்போது விருதின் தொகை ரூ. இருபதாயிரம் (பின்னாளில் விருதுத்தொகை ஒருலட்சமாக உயர்ந்தது). இவருக்கு வழங்கப்பெற்றபோது இருபதாயிரம்தான்.

''வள்ளுவர்வழி'' இதழை இருபத்திரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறார். ஊக்குவிப்பதற்காக நாமும் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்தோம். முதிர்ந்த வயதிலும் இளமை வீறுடன் தொண்டாற்றி வருவது ஒழுக்க முடைமையாலும் திருக்குறட் பணியாலுமே. பாராட்ட வாழ்த்த எண்ணினோம். வாழ்த்தி மகிழ்கிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library



கதைக்கடல்

எ. சோதி

தத்துவப் புதிர்க்கதைகள் என்றொரு நூலைப் பல ஆண்டுகளுக்கு முன் பார்த்தோம்.

"பள்ளிகள் தோறும் இருக்க வேண்டிய நூல். ஆசிரியர்கள் மாணவர்கள் படிக்க வேண்டிய நூல். பரிசு பெறவேண்டிய நூல். நாட்டில் பக்தியையும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் நூல்" என்ற கருத்தை அந்நூலாசிரியருக்கு எழுதி அனுப்பினோம்.

நன்னெறிக் கதைகள் என்று வரிசையாக எழுதினார். ஸ்ரீராமகிருஷ்ண விஜயமும் அதைப்போன்ற தரமான இதழ்களும் இவரது கதைகளை வெளியிட்டன. புகழ்பெற்ற இதழ்கள் பலவும் இவரைப் பாராட்டி எழுதின.

கோபாலையரவர்களை நூற்கடல் என்று கூறுவதைப் போன்று பேராசிரியர் சோதியைக் கதைக்கடல் என்று கூறலாம்.

திருக்கோவலூரை அடுத்த கீழையூரில் 07.07.1950-இல் பிறந்த இவர் புதுச்சேரி தாகூர் அரசு கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். எழுத்தின் மீது கொண்ட ஆர்வத்தால் அண்மையில் (2004) விருப்ப ஓய்வு பெற்றுவிட்டார். அகவை 55 தான் ஆகிறது. இன்னும் காலம் உள்ளது. வருங்காலம் உங்களுடையது.

109 நூல்களை ஆக்கியிருக்கிறீர்கள். உங்கள் நூல் உலகின் பல நாடுகளில் பரவியுள்ளது.

பெரியவர்களுக்குப் பாடிய பாடல்களில் கூறியதை விடப் பல முக்கிய செய்திகளைப் பாப்பாப் பாட்டில் கூறினார் பாரதியார். இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியோர்கள். சிறுவர் உள்ளம் சிறந்தால் வருங்கால உலகம் சிறக்கும்.

அப்பணியில் கதைக்கடல் எ. சோதி வெல்க.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

டாக்டர் புலவர் பொன். தெய்வநாயகி ஜோதி

சிறப்பாகத் தொண்டாற்றும் பெண்பால் தொண்டர் ஒருவரைப் பாராட்ட எண்ணியபோது முதலில் நினைவுக்கு வந்த பெயர் பொன். தெய்வநாயகி ஜோதிதான்.

தமிழில் புலவர் பட்டம் பெற்றவர். பெயரிலுள்ள பொன், தந்தையார் பொன்னுசாமி நாடாரைக் குறிக்கும். பெயருக்கு முன் உள்ள டாக்டர் பட்டம் ஹோமியோபதி டாக்டர் பட்டம். முன்னாள் சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன் இவரது உடன் பிறந்த சகோதரி. இவரது கணவர் திரு. ஜோதி பாண்டியன்.

வள்ளலாரிடம் பேரன்பு கொண்ட பொன். தெய்வநாயகி ஜோதி இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்பே வடலூருக்கு வழிபாட்டுக்கு வருவார். சென்னையில் இராமலிங்கர் பணிமன்ற விழாக்களுக்கு வருவார். அப்போதிருந்தே நமக்குத் தெரியும். 1977-இல் தெய்வப் பணி மகளிர் மன்றம் தொடங்கினார். குழந்தைகள் முதல் முதியோர் வரை மகளிர் சமுதாயத்துக்கு வேண்டிய பற்பல பணிகள். இப்போது மங்கையர்க்கரசியார் ஆசிரமம் அமைத்து அதனுடன் தெய்வப்பணி மகளிர் மன்றத்தைச் சேர்த்து நடத்தி வருகிறார்.

பெண்பாற் புலவரும் சிறந்த பொதுத் தொண்டருமான பொன். தெய்வநாயகி ஜோதி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

சமயக் கலைமணி

தே.ம. பூதலிங்கம்

சமயப் பரப்புநர்களில் சிறந்த ஒருவரைப் பாராட்ட எண்ணிய போது சேலம் சமயக் கலைமணி தே.ம. பூதலிங்கம் அவர்கள் பெயரே நினைவுக்கு வந்தது. வாரியார் சுவாமிகளின் சீடர். திருமடங்களின் தலைவர்கள் பலராலும் பாராட்டப் பெற்றவர். குன்றக்குடி அடிகளாரின் சிறப்பான பாராட்டைப் பெற்றவர். தமிழக அரசின் அறநிலையத்துறை நடத்திய பயிற்சி வகுப்பில் (1966-67) மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர். இருபது ஆண்டுகளாக தெய்வீக நாட்குறிப்பை ஆண்டுதோறும் வெளியிட்டுப் பரப்பி வருபவர். சிறு நூல்களையும் பெரு நூல்களையும் ஆயிரக் கணக்கில் அச்சிட்டுப் பரப்பி வருபவர். திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் பல இடங்களில் நடைபெற்று வருவதில் சேலம் நகரில் பயிற்சி வகுப்பை நடத்தும் பொறுப்பில் இப்போது ஈடுபட்டுள்ளார். சிறந்த சமயப் பரப்புனர் என்ற வகையில் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!!

Koviloor Digital Library

Koviloor Digital Library

KUMARAGURU COLLEGE OF TECHNOLOGY

COIMBATORE - 641 006

ESTD. 1984

Approved by AICTE / Affiliated to Anna University / Accredited by NBA / ISO 9001:2000 Certified

✆ (0422) 2669401 - 405 FAX : (0422) 2669406 E-mail : info@kct.ac.in Web : www.kct.ac.in

Dr. MAHALINGAM VIGYAN BHAVAN

Architectural Masterpiece by **Prof. Dr. K. Arumugam,** Correspondent, KCT
Inaugurated by Hon'ble **Shri. Arjun Singh,** Union HRD Minister
His Excellency Thiru. **P.S. Ramamohan Rao,** Governor of Tamilnadu presided on 11.10.2004

AWARDS

KUMARAGURU COLLEGE OF TECHNOLOGY
"BHARATIYA VIDYA BHAVAN NATIONAL AWARD"
FOR HAVING BEST OVERALL PERFORMANCE FOR THE YEAR 2004.

Dr. K.K. PADMANABHAN
"BHARATIYA VIDYA BHAVAN NATIONAL AWARD"
FOR BEST ENGINEERING COLLEGE PRINCIPAL - 2004

THE COLLEGE AT A GLANCE

Estd in 1984 **In 2004**

COURSES OFFERED

B.E. / B.Tech. Courses in :
✻ Civil Engineering ✻ Mechanical Engineering ✻ Mechatronics Engineering ✻ Electrical & Electronics Engineering ✻ Electronics & Communication Engineering ✻ Computer Science & Engineering ✻ Information Technology ✻ Textile Technology ✻ Industrial Bio-Technology ✻ Fashion Technology.

M.E. / M.Tech. Courses in :
✻ Structural Engineering ✻ Industrial Engineering ✻ Energy Engineering ✻ CAD / CAM ✻ Power Electronics & Drives ✻ Applied Electronics ✻ Communication Systems ✻ Computer Science & Engineering ✻ Textile Technology ✻ Apparel Technology & Management✦

✻ M.C.A. (Master of Computer Applications) M.B.A. (Master of Business Administration) ✦

✦ Anna University Affiliation awaited

HIGHLIGHTS

✻ No. of students on rolls : 2571 ✻ Nos. graduated since 1988 : 4910 ✻ 9.12 lakhs sq.ft. international class infrastructural facilities ✻ Mahatma Gandhi Central Library ✻ STPI IT Park ✻ 1 MBPS + 64 KBPS Internet Connectivity ✻ Auditorium ✻ 9 Seminar Halls ✻ Hostels for Men / Women ✻ Prof. Arumugam Students Centre ✻ Dhyanamantapam ✻ Medical Centre ✻ KVB with ATM ✻ Industry Institute Partnership Cell (IIPC) ✻ Entrepreneurship Development Cell (EDC) ✻ TIFAC-CORE in Textile Tech. & Machinery.

WE ARE PROUD THAT IN 2004

Arutchelvar **Dr. N. MAHALINGAM**
Chairman
was conferred Honorary Degree of Doctor of Science by Madurai Kamaraj University on 25.10.2004

Prof. K. ARUMUGAM
Correspondent
was conferred Honorary Degree of Doctor of Science by Avinashilingam Deemed University on 4.11.2004

Sabanayagam Printers, Chidambaram. Ph. 223040, 223020